விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பதின்னான்கு

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 ஐப்பசி 14 சனிக்கிழமை (31.10.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 316




## புலிகளின் சர்வதேச வலையமைப்பை 57 ஈழவாதிகள் வழிநடத்துகின்றனர்

### ★திவயின தகவல் வெளியீடு★

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் சர்வதேச வலையமைப்பை வழிநடத்தி வரும் 57 ஈழவாதிகள் தொடர்பாகப் பாதுகாப்புத் தரப்பினரால் கைது செய்யப்பட்டிருக்கும் விடுதலைப்புலிகளின் சர்வதேச அமைப்பாளர் கே.பி. என்ற குமரன் பத்மநாதன் தகவல்களை வெளியிட்டிருப்பதாகவும் இந்தப் பட்டியல் இதுவரை அறியப்பட்டிருக்கவில்லை என திவயின தெரிவித்துள்ளது. (14 ஆம் பக்கம் பார்க்க)

## இரு தேர்தல்கள் ஒரே நாளில் நடந்தால் மோசடிகள் இடம்பெற அதிக வாய்ப்பு


### தேர்தல் ஆணையாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தல் என்பவற்றை ஒரே தினத்தில் நடத்தும் பட்சத்தில் பல்வேறுபட்ட பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டி ஏற்படும் என தேர்தல்கள் ஆணையாளர் தயானந்த திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித்தலைவர் கருஜயசூரிய தலைமையிலான குழு ஒன்று நேற்று தேர்தல்கள் (14 ஆம் பக்கம் பார்க்க)

# யாழில் கடந்த மூன்று மாத காலத்தில் சுமார் 50 ஆயிரம் பேர் மீள்குடியமர்வு



## யாழ். அரச அதிபர் தகவல்

(யாழ்ப்பாணம்)

வவுனியா மற்றும் யாழ்.மாவட்டத்தில் தங்க வைக்கப்பட்டிருந்த 16 ஆயிரத்து 185 குடும்பங்களைச் சேர்ந்த 49 ஆயிரத்து 813 பேர் கடந்த 3 மாத காலப் பகுதிக்குள் யாழ்.மாவட்டத்தில் மீள்குடியமர்த்தப்பட்டுள்ளதாக யாழ்.அரச அதிபர் க.கணேஷ் தெரிவித்தார். (14 ஆம் பக்கம் பார்க்க)

## 2 ஆயிரம் பேர் இன்று வருவர்

(யாழ்ப்பாணம்)

கரவெட்டி மற்றும் பருத்தித்துறைப் பிரதேச செயலக பிரிவுகளைச் சேர்ந்த சுமார் 2 ஆயிரம் பேர் இன்று வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வரப்படுவார்கள் என யாழ்.அரச அதிபர் க.கணேஷ் தெரிவித்தார். இவ்வாறு அழைத்து வரப்படுபவர்கள் பதிவுகள் மேற்கொள்ளப்பட்ட பின் சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கப்படுவர் எனவும் அவர் கூறினார். (ச-5)

## இலங்கைக் கடற்படையில் சீனர்கள் விசாரணைக்கு இந்தியா உத்தரவு!

(இராமேஸ்வரம்)

இலங்கைக் கடற்படையில் சீன வீரர்கள் இருந்தது குறித்து இந்திய கடலோரக் காவற்படை விசாரணை செய்ய மத்திய பாதுகாப்பு அமைச்சகம் உத்தரவிட்டுள்ளது.

இலங்கையில் போர் முடிபடைந்தாலும் இராமநாதபுரம் மாவட்டம் இராமேஸ்வரம், பாம்பன், மண்டபம் விசைப் படகு மீனவர்கள் இலங்கைக் கடற்படையால் தாக்கப்படுவது தொடர்கின்றது.

கடந்த 2 மாதத்திற்கு முன் இராமேஸ்வரம் மீனவர்கள் (14 ஆம் பக்கம் பார்க்க)

## ஊடகவியலாளர்களுக்கு அச்சுறுத்தல் விசாரணை நடத்த ஜனாதிபதி உத்தரவு

(கொழும்பு)

சண்டே லீடர் செய்திப் பத்திரிகையில் 2 ஊடகவியலாளர்களுக்கு ஏற்பட்டுள்ள மரண அச்சுறுத்தல் தொடர்பில் விசாரணை நடத்துமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார்.

சண்டே லீடர் பத்திரிகையின் இரண்டு சிரேஷ்ட உறுப்பினர்களுக்கு விடுக்கப்பட்டுள்ள இந்த அச்சுறுத்தல் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்குமாறு ஜனாதிபதி பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

நியூயோர்க் (14 ஆம் பக்கம் பார்க்க)

## திருப்பதி ஏழுமலையானை தரிசிக்க ஜனாதிபதி மகிந்த இன்று பயணம்!

(புதுடில்லி)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ திருப்பதி கோவிலுக்கு இன்று செல்லத் திட்டமிட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன்படி அவர் சிறப்பு விமானம் மூலம் கொழும்பிலிருந்து ஆந்திரா மாநிலம் ரேணி குண்டா விமான நிலையத்திற்கு இன்று காலை 11 மணிக்குச் செல்கின்றார்.

பின்னர் அவர் வாகனம் (14 ஆம் பக்கம் பார்க்க)

### கரையேற விடாது தாக்குதல்

## அலையில் சிக்குண்ட இளைஞன் மரணம்

(கொழும்பு)

கடலிலிருந்து தரைக்கு வர முயன்ற இளைஞனைச் சிலர் தடுத்ததால் அலைக்குள் சிக்குண்டு அவ் இளைஞன் உயிரிழந்துள்ளார். இச் சம்பவம் கொழும்பில் இடம்பெற்றுள்ளது. இது தொடர்பாகத் தெரிய வருவதாவது,

பம்பலப்பிட்டியில் அமைந் (14 ஆம் பக்கம் பார்க்க)

## 32-வது பொலிஸ் மாஅதிபராக மகிந்த பாலசூரிய நியமனம்?

(கொழும்பு)

இலங்கையின் பொலிஸ் மாஅதிபராக மகிந்த பாலசூரிய நியமிக்கப்படலாம் என நம்பத் தகுந்த வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தற்போதைய பொலிஸ் மாஅதிபர் ஜயந்த விக்ரமரட்ண எதிர்வரும் 3 ஆம் திகதியுடன் ஓய்வுபெறவுள்ளதாகவும் குறித்த வெற்றிடத்திற்காக மகிந்த (14 ஆம் பக்கம் பார்க்க)

உள்ளே...

தமிழகத்தின் பிரபல சோதிடர் சிவல்புரி சிங்காரம்

எழுதும் இராகு கேது மாற்றம் உங்களுக்கு எப்படி?

## சீருடை அணியும் படையினர் அரசியலில் ஈடுபடத் தடை!



### ★இராணுவத் தளபதி அறிவிப்பு★

(கொழும்பு)

இராணுவச் சீருடை அணியும் எந்தவொரு படை அதிகாரியோ அல்லது படைச் சிப்பாயோ அரசியல் ஈடுபட முடியாது என இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் ஜெகத் ஜெய சூரிய கூறியுள்ளார்.

இராணுவத் தலைமையகத்தில் இடம்பெற்ற சிறப்புச் சந்திப்பு ஒன்றில் இவ்வாறு கருத்துரைத்துள்ளார்.

இராணுவத்தில் உள்ளோர் அரசாங்கத்திற்கு ஆதரவாகவே செயற்பட முடியும். இராணுவ சீருடை அணியும் எந்தவொரு படை அதிகாரியோ அல்லது படைச் சிப்பாயோ அரசியல் ஈடுபடும் உரிமை கிடையாது. அவ்வாறு ஈடுபடுவோர் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும். அத்துடன் அவர்கள் பணி நீக்கம் செய்யப்படுவார்கள் என எச்சரித்துள்ளார். (ச-5)




யாழ்., கிளிநொச்சி முஸ்லிம் மக்கள் பணிமனையினால் ஏற்பாடு செய்யப்பட்ட பலவந்த வெளியேற்றமும் கௌரவமான மீள்குடியேற்றமும் என்ற நிகழ்ச்சி யாழ். ஒஸ்மானியாக் கல்லூரியில் நேற்று இடம்பெற்றது. இந்நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உரையாற்றுவதையும் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் மீள் குடியமர்த்தப்பட்ட முஸ்லிம்களுக்கு உலர் உணவை அரச அதிபர் கையளிப்பதையும் நிகழ்வில் கலந்துகொண்ட ஒரு தொகுதியினரையும் படங்களில் காணலாம்.

## கலைமாணி பகுதி II பெறுபேறு வெளியானது

(யாழ்ப்பாணம்)

2008ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட கலைமாணி பகுதி-II-2004& 2005 பரீட்சைப் பெறுபேறுகள் நேற்று வெளியாகியுள்ளது.

எதிர்வரும் 3ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தொடக்கம் மாணவர்கள் வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகுடன் தொடர்பு கொண்டு பரீட்சைப் பெறுபேறுகளை பெற்றுக் கொள்ளலாம் என வெளிவாரிப் பரீட்சைப் பிரிவின் இணைப்பாளர் கே.சிவராஜ் அறிவித்துள்ளார். (ச)

## தனங்கிளப்பு விவசாயிகளுக்கு விதைநெல் இன்று விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் கைவிடப்பட்ட காணிகளில் நெற்செய்கை மேற்கொள்ள இருக்கும் விவசாயிகளுக்கு தேவைப்படும் விதை நெல்லின் மற்றும் ஒரு தொகுதியானது தனங்கிளப்பு பிரதேசத்தில் நெற் செய்கையை மேற்கொள்ள இருக்கும் விவசாயிகளுக்கு கைதடி விவசாய விரிவாக்க நிலையத்தில் இன்று சனிக்கிழமை காலை 9.00 மணி முதல் பிற்பகல் ஒரு மணிவரை விநியோகிக்கப்படவுள்ளதாக யாழ். பிரதி விவசாயப் பணிப்பாளர் சி.சிவகுமார் அறிவித்துள்ளார்.

கமக்கார அமைப்புகளிடம் நெற்செய்கையை மேற்கொள்வதற்கான பதிவுகளை மேற்கொண்டு அவர்களது பதிவுகள் ஏற்றுக்கொள்ளப்பட்ட காணி உரிமையாளர்கள் மற்றும் சட்டரீதியான குத்தகை ஆவணங்களைக் கொண்டிருக்கும் விவசாயிகள் விதை நெல் பெற்றுக்கொள்வதற்காக அழைக்கப்படுகின்றார்கள்.

செய்கை மேற்கொள்ளும் காணியின் விஸ்தீரணத்திற்கேற்ப விதைநெல் விநியோகிக்கப்படவுள்ளதால் பொலிசாக்கு ஒன்றினையும் எடுத்துவருமாறு வேண்டப்படுகின்றார்கள் எனவும் அவர் அறிவித்துள்ளார். (ச)

## கொக்குவில் இந்துவில் மின்னொளி கூடைபந்தாட்ட திடல் திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் இந்துக் கல்லூரியின் மின்னொளி கூடைப்பந்தாட்டத் திடல் திறப்பு விழா இன்று சனிக்கிழமை இரவு 7மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்து கொண்டு மின்னொளி கூடைப்பந்தாட்டத்திடலை திறந்துவைக்கவுள்ளார். இந்நிகழ்வில் கலைநிகழ்வுகள், காட்சிப் போட்டிகள் என்பன இடம் பெறும். (ச-14)

# பயிரிடப்படாத விவசாய நிலங்களில் பயிர்ச் செய்கை மேற்கொள்ளக் கடன்

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உறுதி

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் பயிர்ச் செய்கைகள் மேற்கொள்ளப்படாதிருக்கும் விவசாய நிலங்களைப் பயன்படுத்துவதற்கான திட்டத்தை தான் நடை முறைப்படுத்தவுள்ளதாகவும் இதற்கென வட்டியில்லா இலகுக் கடன் வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கும் தான் நடவடிக்கை எடுத்து வருவதாகவும் கூட்டுறவு அல் லது விவசாய சங்கங்களின் மூலம் பயிர்ச் செய்கைகள் மேற்கொள்ளப்படாதிருக்கும் விவசாய நிலங்களை குத்தகைக்குப் பெற்று அவற்றில் பயிர்ச் செய்கைகளை மேற் கொண்டு பல்வேறு பயன்களை நாம் பெற இயலும் என்றும் சமூகசேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

நேற்று யாழ்.மாவட்ட விவசாயத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் திருநெல்வேலியில் இடம் பெற்ற வைபவத்தில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இங்கு மேலும் கருத்துத் தெரிவிக்கையில், விவசாயச் செய்கையை யாழ். குடாநாட்டில் விருத்தி செய்வதன் மூலம் ஏராளமான இளைஞர் யுவதிகளுக்கு அவ்வுற்பத்திகள் சார்ந்த பல்வேறு தொழில் வாய்ப்புகளை எங்களால் ஏற்படுத்திக் கொடுக்க இயலும். புதிய வகையிலான நாற்றுக்கள் இனங் காணப்பட்டு புதிய தொழில்நுட்பங்களை உபயோகித்து எமது விவசாயக் துறையைமேம்படுத்துவது அவசியமாகும். முந்திரிகைச் செய்கையில் நாம் இந்த உத்திகளைப் பயன்படுத்த வேண்டும் தூவல் நீர்ப்பாசன முறைமையையும் நாம் பரவலான பயன்



பாட்டுக்குக் கொண்டு வர வேண்டும். பயிர்ச் செய்கைகளுக்குத் தேவையான எரு உரத்தை வவுனியா போன்ற பகுதிகளில் இருந்து கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்படும்.பல்வேறு உதவிகளைப் பெற்று யாழ். குடாநாட்டின் விவசாயத்துறையை மேம்படுத்த என்னால் அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு உதவு வதாகவும் அமைச்சர் கூறினார்.

இந்நிகழ்வின் போது 927 பயனாளிகளுக்கு திராட்சை கன்றுகள், 30 பயனாளிகளுக்கு தூவல் நீர்ப்பாசனத் தொகுதிகள், மாம்பழ அறுவடைக் கருவிகள், காளான் வளர்ப்புச் செய்கைக்கான உபகரணங்கள் என்பன அமைச்சரால் வழங்கப்பட்டமை குறிப்பிடத் தக்கதாகும். (ச)

## பட்ட மேற்கல்வி டிப்ளோமா மாணவர் கலந்துரையாடல்

இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தின் பட்டமேற் கல்வி டிப்ளோமா 2009/2010 கல்வியாண்டு மாணவர்களுக்கான விசேட கலந்துரையாடல் நாளைகாலை 9 மணிக்கு யாழ். பிராந்தியத்திய நிலையத்தில்நடைபெறுமென இணைப்பாளர் அறிவித்துள்ளார். (ச)

## போயா ஆன்மீக நிகழ்ச்சி

யாழ்ப்பாணம் பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில் போயா ஆன்மீக நிகழ்ச்சி நாளை மறுதினம் திங்கட் கிழமை அதிகாலை 4.45 மணிக்கு நகரசங்கீர்த்தனம் இடம் பெற்று காலை 9.00 மணிக்கு நிகழ்ச்சிகள் ஆரம்பமாகி ஓம்காரம், வேத பாராயணம், தியானம், சாதனை, பஜனை, சிறப்புச் சொற்பொழிவு, நாராயண சேவை என்பவற்றுடன் மதியம் 12.30 மணிக்கு நிறைவு பெறும். (ச)

## மின் இயந்திரவியல் பயிற்சி நெறி

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையினரால் கடந்த 23,24ஆம் திகதிகளில் முறையே பருத்தித்துறை மற்றும் சங்கானை பிரதேச வைத்திய சாலைகளில் நடைபெறவிருந்த மின் இயந்திரவியல் பயிற்சி நெறி இன்றும், நாளையும் முறையே மேற்குறித்த வைத்திய சாலைகளில் நடைபெறும் என சகல வைத்தியசாலை மற்றும் வைத்திய அதிகாரிகள் பணிமனைகளுக்கும் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை பிராந்தியப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ் வரன் அறிவித்துள்ளார். (ச-3)

## மாதர் சங்கங்களுக்கு 1.2 மில்லியன் நிதியுதவி

கரித்தாஸ்-கியுடெக் நிறுவனத்தினால் உடுவில் பிரதேச செயலகத்தின் ஊடாக உடுவில் மத்தி, உடுவில் தென்கிழக்கு, கந்தரோடை ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மாதர் அபி விருத்தி சங்கங்களுக்கு தலா 4 இலட்சம் ரூபாய் வீதம் 1,2 மில்லியன் ரூபாய் நிதி மானியமாக வழங்கப்பட உள்ளது.

இந் நிதியை அச்சங்கங்கள் தமது சங்க உறுப்பினர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் முகமாக சுழற்சி முறைக்கடன் திட்டத்தின் மூலம் பயனடைவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ச)


வடமராட்சியில்,
தொழிற்பயிற்சி நெறிகள்
யாழ். தொழில்நுட்ப கல்வி மையம்

1. மின் தொழில் நுட்பம் Electrical (7மாதம்)
2. மோட்டார் றீவைண்டிங்
3. குளிர்சாதன இயந்திரங்கள் Air Conditioning and Refrigeration (7மாதம்)
4. காட்வெயார் Hardware and Electronics
5. மோட்டார் வாகன பொறியியல் (7 மாதம்) (மோட்டார் சைக்கிள் நீர் இறைக்கும் இயந்திரம்)
6. இலத்திரனியல் Electronics (7 மாதம்) மொனிற்றர் T.V,CD,UPS

புதிய பிரிவு ஆரம்பம்:- 7.11.2009 9.11.2009

பதிவுகள் 31.10.2009 தொடக்கம் ஏற்றுக் கொள்ளப்படும்.
சனி. ஞாயிறு வகுப்புக்களும் பகுதிநேர வகுப்புக்களும் நடைபெறு
1-ம் கட்டை, தம்பசிட்டி றோட் (ரவறடி)
T.P.: 077 9152617
(3861)

மீண்டும் உங்கள் கைகளில்...
உங்களுக்குத் தேவையான வெளிநாட்டு, உள்நாட்டு தீராந்தி வகைகளையும் பல்வேறு பலகை வகைகளையும் சகல அளவுகளிலும் பெற்றுக் கொள்வதற்கு நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்,
என்.எம்.ரி.மரக்காலை
291, கண்டி வீதி,
சாவகச்சேரி.
(G-3694)

Computer Express
Institute of Information Technology
No 167, Kasthuriyar Road, jaffna. T.P-021 2228250
யாழ் நகரில் முதன்முறையாக, ஒரு வாரகால முழுநேர தொழில்சார் கணனிக்கற்கை நெறிகள் A/L பரீட்சை எழுதிய மாணவர்களிற்கும், கணனி ஆர்வலர்களிற்கும் புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.
Diploma in Video Editing
சர்வதேச ரீதியில் முன்னணியிலுள்ள மென்பொருட்களான
Adobe Photoshop+Cool 3D Studio+VCD cutter Capturing+Pinnacle Studio+Adobe premeir
ஆகியவற்றினூடாக கற்பிக்கப்படும்
Diploma in Hardware Engineering
Assembling+Upgrading+Troubleshooting+Repairing Servicing+Software Installation+Config Networking Ect..
Diploma in Graphic Designing
சர்வதேச ரீதியில் முன்னணியிலுள்ள மென்பொருட்கள்ான
Adobe Photo shop+Corel Draw Macro Media Flash+Cool 3D Studio
புதிய பிரிவுகள் ஆரம்பம்- 02.11.2009-09AM
(3627)

தோட்டக்காணி விற்பனைக்கு
அளவெட்டி டச்சு றோட்டில் எட்டுப் பரப்பு தோட்டக்காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு:- 0772985314
(3866)

# இன்று ஒரு தகவல்

## ஆசைக்கும் எல்லை உண்டு

வழிப்போக்கன் ஒருவன் வேகமாகப் போய்க் கொண்டிருந்தான். அவன் வேகமாக நடந்ததற்குக் காரணம் அது வெயில் காலம் ... காலில் செருப்பில்லை... மணல் பாதை ... அதுதான் அவன் வேகமாக நடக்கக்காரணம்.

அந்தச் சமயத்தில் ஒருவன் குதிரை மீதேறி அவ்வழியாக வந்து கொண்டிருந்தான். அவன் காலில் செருப்பு அணிந்திருந்தான். கையில் குடையும் வைத்திருந்தான்.

நடந்து போய்க் கொண்டிருந்தவன். ,குதிரை மீதிருந்தவனைப் பார்த்து, "ஐயா! நீங்களோ குதிரை மீது உட்கார்ந்து கொண்டு போகிறீர்கள். அப்படியிருக்கும் போது உங்களுக்கு அந்தச் செருப்பு எதற்கு? அதை எனக்குக் கொடுத்து உதவலாமே!" என்று கேட்டான்.

குதிரை மீதிருந்தவன் யோசித்தான். "இவன் சொல்வதும் நியாயம் தானே..." என்று நினைத்த அவன், தன்னுடைய செருப்பைக் கழற்றி அந்த வழிப்போக்கனிடம் கொடுத்தான்.

"மிகவும் நல்லது" என்று சொல்லி வழிப்போக்கனும் செருப்பை வாங்கி தன் காலில் மாட்டிக் கொண்டான்.

அதன் பின் மீண்டும் பேச ஆரம்பித்தான்.

"ஐயா நீங்கள் குதிரையில் போவதால், போக வேண்டிய இடத்திற்கு விரைவில் போய்ச் சேர்ந்து விடுவீர்கள். அதனால் உங்கள் கையில் அந்தக் குடை எதற்கு? நான் நடந்து போய்க் கொண்டிருப்பவன். நான் இந்த வெயிலில் நீண்டநேரம் நடக்க வேண்டியிருக்கும்! அதனால் அந்தக் குடையையும் எனக்குக் கொடுங்களேன்" என்று வினவினான்.

குதிரை வீரன் யோசித்தான். 'இதுவும் நியாயம் தான்' என்று அவனுக்குத் தோன்றியது.

உடனே அவன் இரக்கப்பட்டு தன்னிடமிருந்த குடையையும் வழிப்போக்கனிடம் கொடுத்து விட்டான்.

அதன்பின் குதிரைவீரன் நிம்மதியாகப் புறப்பட்டான்.

இப்போது வழிப்போக்கன் மறுபடியும் கைதட்டி குதிரை வீரனை நிறுத்தினான்.

"என்னப்பா... ஏன் என்னை நிறுத்தினாய்? இன்னும் உனக்கு ஏதாவது வேண்டுமா?" என்று குதிரையில் இருந்தவன் வினவினான்.

இவன் மெதுவாக வாயைத் திறந்து 'அந்தக் குதிரையையும் எனக்குக் கொடுங்களேன்' என்றான்.

அந்தக் குதிரைவீரன் இப்போது ஒருகணம் யோசித்துப் பார்த்தான்.

உடனே தன்னிடமிருந்த குதிரைச் சவுக்கால் அவனை வாங்கு வாங்கென்று பின்னியெடுத்தான். அவ்வளவு சவுக்கடியையும் வாங்கிக் கொண்டு அந்த ஆள் சிரித்தான்.

குதிரை வீரனுக்கு ஒன்றும் புரியவில்லை.

"என்னப்பா அவ்வளவு அடியையும் வாங்கிக் கொண்டு இப்படிச் சிரிக்கிறாய்?" என்று கேட்டான்.

இப்போது அந்த வழிப்போக்கன் கூறினான்.

"ஐயா... நான் இப்படி சிரிப்பதற்குக் காரணம் இருக்கிறது. இப்படிக் குதிரையைக் கேட்டு உங்களிடம் அடிவாங்கவில்லை என்று வைத்துக் கொள்ளுங்கள். என் உயிர் உள்ள வரையில் மனதில் ஒரு தவிப்பு இருந்து கொண்டேயிருக்கும். 'செருப்பையும் குடையையும் கேட்டவுடனே கொடுத்தாரே... குதிரையையும் கேட்டிருந்தால் கொடுத்திருப்பாரோ!" என்ற பேராசையில் ஏங்கிக் கொண்டே இருப்பேன். இப்போது உங்களிடம் அடிவாங்கிய பின் என்னுடைய அந்தச் சந்தேகம் தீர்ந்து போய் விட்டது. இப்போது என்னுடைய ஆசைக்கு எல்லை எது என்பது எனக்குப் புரிந்து விட்டது" என்று சொல்லிவிட்டு அவன் நடக்கத் தொடங்கினான்.

'ஆசைக்கும் எல்லையுண்டு' என்பதை இந்தக் கதை விளக்குகிறது.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# மாற்று ஆற்றலுள்ளோர் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

மாற்று ஆற்றலுள்ளோர் தினத்தை முன்னிட்டு வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களிடையே கோட்ட மட்டத்தில் நடத்தப்பட்ட போட்டி முடிபுகள் வெளியிடப்பட்டுள்ளன.

இதில் சங்கானை மற்றும் தெல்லிப்பழைக் கோட்ட முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் பெயர் விபரம் வருமாறு,

### சங்கானைக் கோட்டம்

**பேச்சு**

பிரிவு I- ச. மதுகரி (பண்ணாகம் மெய்கண்டான் ம.வி), செ. சிவபாலன் (அராலி முருகமூர்த்தி வித்தி, சி. லக்சன் (வட்டு மத்திய கல்லூரி).

பிரிவு II - வி. ஸ்ரீசுபாங்கி (வட்டு மத்திய கல்லூரி), ரி. தயாளினி (பண்ணாகம் மெய்கண்டான் ம.வி), அ. விணோதினி (அராலி வள்ளியம்மை ஞா. வித்தி.

பிரிவு III - வி. ஸ்ரீ மாதங்கி (வட்டு மத்திய கல்லூரி), வி. கோபிகா (பண்ணாகம் மெய்கண்டான் ம.வி), யோ. யனோஜி (அராலி இந்துக் கல்லூரி).

**கட்டுரை**

பிரிவு I- க. வித்தியா (வட்டு மத்திய கல்லூரி), ஸ்ரீபதி அதிகாரம் (பண்ணாகம் மெய்கண்டான் ம.வி), கி. டனுஜன் (அராலி முருகமூர்த்தி வித்தி.

பிரிவு II - க. ராதிகா (வட்டு மத்திய கல்லூரி), ற. அப்ராஜினி (பண்ணாகம் மெய்கண்டான் ம.வி), ம. விவிதாரணி (வட்டு இந்துக் கல்லூரி).

பிரிவு III - த. சுபசுஜனி (வட்டு இந்துக் கல்லூரி), த. காயத்திரி (வட்டு மத்திய கல்லூரி), தெ. புவனேஸ் (அராலி சரஸ்வதி ம.வி).

**தனி இசை**

பிரிவு I –செ. டக்சன் (சங்கரத்தை சின்னம்மா வித்தி), இ. சுகந்தி (வட்டு மத்திய கல்லூரி), த. வசந்தன் (அராலி இந்துக் கல்லூரி).

பிரிவு II- யு. மதிசன் (வட்டு இந்துக் கல்லூரி), ப. பிரியங்கன் (சுழிபுரம் விக்ரோறியா கல்லூரி), த. கோபிகா (வட்டு மத்திய கல்லூரி).

பிரிவு III – சி. நிஷாயினி (வட்டு மத்திய கல்லூரி), ட. டெசிந்தா (சுழிபுரம் விக்ரோறியா கல்லூரி), வெ. திவ்யஹரி (யாழ்ப்பாணக் கல்லூரி)

**குழுஇசை**

பிரிவு I- அராலி இந்துக் கல்லூரி, வட்டு மேற்கு அ.மி.த.க. பாட, வட்டு கார்த்திகேயா வித்தி.

பிரிவு II - வட்டு இந்துக் கல்லூரி, அராலி இந்துக் கல்லூரி.

பிரிவு III– வட்டு இந்துக் கல்லூரி, சுழிபுரம் விக்ரோறியா கல்லூரி.

**தனி நடனம்**

பிரிவு I -மா. தாட்சாயினி (சுழிபுரம் ஐக்கிய சங்க வித்தி,

பிரிவு II- த. யதுசா (வட்டு இந்துக் கல்லூரி),

பிரிவு III -பா. தனுசா (வட்டு இந்துக் கல்லூரி).

**குழு நடனம்**

பிரிவு I, II, III – (வட்டு இந்துக் கல்லூரி),

**நாடகம்**

(வட்டு இந்துக் கல்லூரி), (வட்டு மத்திய கல்லூரி).

**வில்லுப்பாட்டு**

(வட்டு இந்துக் கல்லூரி).

### தெல்லிப்பழைக் கோட்டம்

**பேச்சு**

பிரிவு I – பொ. பிரக்சனா (பன்னாலை சேர் கனகசபை அ.த.க பாடசாலை), ஜெ. சுகன்யா (அளவெட்டி அருணாசலம் வித்தி, பு. கஜேந்தினி (இளவாலை மெய்கண்டான் ம.வி).

பிரிவு II – த. டன்சிகா (மகாஜனாக் கல்லூரி), அ. மேரிஸ்ரெயா (மயிலிட்டி வடக்கு கலைமகள் வித்தி), த. கவிராஜ் (மல்லாகம் மகா. வித்தி).

பிரிவு III - இ. கஜீபன் (மகாஜனக் கல்லூரி), கு. பிரியா (மல்லாகம் மகா. வித்தி, ம. நிருஜா (யூனியன் கல்லூரி).

**கட்டுரை**

பிரிவு I- த. ஜெயதரன் (மகாஜனக் கல்லூரி), அ. ஜெசிங்டன்டினோ (இளவாலை மெய்கண்டான் ம.வி)

பிரிவு II – சு. சகானா (மகா ஜனக் கல்லூரி), பொ. பிரியதர்சினி (பன்னாலை சேர் கனகசபை அ.த.க. பாடசாலை), பு. கஜரூபி (இளவாலை மெய்கண்டான் ம.வி).

பிரிவு III – தி. அரசாயினி (மல்லாகம் மகா. வித்தி), இ. சிஹீவாணி (மகாஜனக் கல்லூரி), ச. அன்ரனி பிரதீஸ் (மயிலிட்டி வடக்கு கலைமகள் வித்தி.

**தனி இசை**

பிரிவு I – ச. அபிராமி (அளவெட்டி அருணாசலம் வித்தி, த. பிரதீபன் (தெல்லிப்பழை சைவப்பிரகாசா வித்தி.

பிரிவு II – ஜெ. கர்ஜினி (யூனியன் கல்லூரி), ப. பகீரதன் (மயிலிட்டி வடக்கு கலைமகள் வித்தி, ந. கோபிகா (சதானந்தா வித்தி.

பிரிவு III – சி. அனோஸ்ரீஜன் (மல்லாகம் மகா வித்தி, செ. வாரணன் (அருணோதயாக் கல்லூரி).

**குழுஇசை**

பிரிவு II – மகாஜனக் கல்லூரி, அளவெட்டி அருணோதயாக் கல்லூரி, யூனியன் கல்லூரி.

பிரிவு III– மல்லாகம் மகா வித்தி.

**குழு நடனம்**

பிரிவு II – மகாஜனக் கல்லூரி.

**தனி நடனம்**

பிரிவு III - கா. சர்மியா (மல்லாகம் மகா வித்தி.

**நாடகம் திறந்த போட்டி**

இளவாலை மெய்கண்டான் ம.வி.

இதில் குழு நிகழ்ச்சிகளில் கோட்டமட்டத்தில் பங்கு பற்றிய மாணவர்கள் மாத்திரமே வலய மட்டத்தில் பங்குபற்ற சந்தர்ப்பம் உண்டு எனவும், பெயர் மாற்றங்கள் எவையும் செய்யப்படமாட்டாது என்றும், கோட்ட மட்டப் போட்டிகளில் முதலாம், இரண்டாம் இடங்களைப் பெற்ற மாணவர்கள் வலய மட்டப் போட்டிகளில் பங்குபற்ற தகுதி உடையவர்கள் என்றும் வலய மட்டப் போட்டிகள் கார்த்திகை மாத முதல் வாரத்தில் இடம்பெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஓ

# இராசி பலன்

*31.10.2009*
*(ஐப்பசி 14 சனிக்கிழமை)*
*திரயோதசி பின்னிரவு 2.00 மணிவரை*
*உத்தரட்டாதி முன்னிரவு 7.19 மணிவரை*
*இராகுகாலம் 9.03-10.33 மணிவரை*
*சுபநேரம் 3.03-4.33 மணிவரை*
*சனிப்பிரதோஷ விரதம்*

| | |
|---|---|
| மேடம் | மனச்சோர்வு, காரிய அலைச்சல், சுபசெலவு, குடும்பக் கவலை. |
| இடபம் | தனதானிய சேர்க்கை, நண்பர்கள் சந்திப்பு, விருந்துபசாரம், சயன சுகம். |
| மிதுனம் | பெரியோரால் மதிக்கப்படுதல், தொழில் மேன்மை, மனமகிழ்ச்சி, போசன சுகம். |
| கடகம் | சரீரப் பிரயாசை, ஆன்றோர் சந்திப்பு, ரோகபயம், புதிய திட்டமிடல். |
| சிங்கம் | வீண்பகை, கௌரவக்குறைவு, தனவிரயம், போசன சுகம். |
| கன்னி | நல்ல வரவேற்பு, தேகநலன், காரிய நன்மை, சயன சுகம். |
| துலாம் | தடைப்பட்ட காரியம் கைகூடும், சிந்தனை மிகுதி, சிறந்த ஆரோக்கியம், போசன சுகம். |
| விருச்சிகம் | பணக்குறைவு, காரிய இடையூறு, புத்திரரால் கவலை, சிறுவியாதி. |
| தனுசு | வாகன சுகம், சுபசெய்தி, நண்பர்கள் சந்திப்பு, திடீர் நன்மை. |
| மகரம் | நற்கீர்த்தி, சகோதரர் உதவி, பொருள் சேர்க்கை, தொழில் நன்மை. |
| கும்பம் | மனோ சங்கடம், பித்தரோகம், தனவிரயம், முயற்சி தாமதம். |
| மீனம் | சயன சுகம், மார்தர் நட்பு, நல்ல முயற்சி, தூரதேசச் செய்தி. |

வளவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 60 | 90 |
| உருளைக்கிழங்கு | 80 | 100 | 90 |
| பச்சைமிளகாய் | 50 | 60 | 45 |
| தக்காளி | 30 | 50 | 55 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 40 | 40 |
| கோவா | 40 | 50 | 70 |
| கரட் | 50 | 80 | 70 |
| பூசணி | 15 | 30 | 30 |
| புடோல் | 20 | 40 | 35 |
| வாழைக்காய் | 25 | 30 | 45 |
| சின்ன வெங்காயம் | 70 | 80 | 70 |
| பெரிய வெங்காயம் | 60 | 80 | 90 |
| பாகற்காய் | 120 | 140 | 100 |
| வெண்டிக்காய் | 30 | 40 | 40 |
| கரணைக் கிழங்கு | 30 | 40 | 60 |
| பயிற்றங்காய் | 40 | 60 | 60 |
| லீக்ஸ் | 120 | 120 | 130 |
| பீற்றூட் | 40 | 50 | 40 |
| கறிமிளகாய் | 80 | 90 | 90 |
| முருங்கைக்காய் | 190 | 220 | 140 |
| கீரை – 1 பிடி | 10 | 15 | 20 |
| தேசிக்காய் | 200 | 220 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 35 | 35 |

# மணிமண்டப திறப்புவிழா

(யாழ்ப்பாணம்)

நல்லூர் ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலயத்திற்கருகாமையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட நடராசா பரமேஸ்வரி மணிமண்டப திறப்பு விழா நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 10 மணிக்கு மணிமண்டப ஸ்தாபகர் நடராசா சத்தியரூபன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் பிரதம விருந்தினராக யாழ். அரச அதிபர் க.கணேஷ் கலந்து கொண்டு மணி மண்டபத்தினை திறந்து வைக்கவுள்ளதுடன் சிறப்பு விருந்தினராக நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் கலந்து கொள்ளவுள்ளார்.

நிகழ்வில் ஆசியுரையினை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள், சந்நிதியான் ஆச்சிரதமமுதல்வர் அமுத கலாஜோதி சிவத்திரு மோகனதாஸ் சுவாமிகள் ஆகியோரும் வாழ்த்துரைகளை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் சைவத்தமிழ் பண்பாட்டுப் பேரவைப் பணிப்பாளர் மதுரகவி காரை.எம்.பி.அருளானந்தன் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

தொடர்ந்து கலைஞர் கௌரவிப்பு இடம் பெறவுள்ளது. (ஓ-4)

# அல்லைப்பிட்டிப் பிரதேசத்தில் அமைக்கப்பட்ட குடிசார் - இராணுவ இணைப்புக் குழு

(யாழ்ப்பாணம்)

வேலணைப் பிரதேசத்தின் அல்லைப்பிட்டி மீள்குடியேற்ற கிராமத்தில் உள்ள அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயத்தில் வேலணைப் பிரதேச செயலர் எம்.நந்தகோபாலன் தலைமையில் நடைபெற்ற இராணுவ இணைப்புக் குழு அமைத்தல் கூட்டத்தில் பின்வருவோர் அங்கத்தவர்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

எஸ்.இரட்ணேஸ்வரன் -கிராமசேவகர் J/10, திருமதி எஸ்.சூரியகலா -சமுர்த்தி உத்தியோகத்தர், கே.சிறிஸ்கந்தராசா -அதிபர், பராசக்தி வித்தியாலயம் அல்லைப்பிட்டி, மக்கள் தொடர்பு உத்தியோகத்தர் -கடற்படை அதிகாரி, வேலணை, மக்கள் தொடர்பு உத்தியோகத்தர் - காவல்துறை உத்தியோகத்தர், ஊர்காவற்றுறை.

எஸ்.அனுசூதனன்-மக்கள் சுகாதார உத்தியோகத்தர், திருமதி செ.யோகேஸ்வரி -கிராமிய சுகாதாரத் தொண்டர், ஞா.அ.எட்ரீசன் -மீன்பிடிக் கடற்றொழில் சங்கத்தலைவர், இ.கமலதாசன்-விவசாய சம்மேளனம், க.உதயகுமார் -விளையாட்டுக்கழகம், ஜோ.பிரேம்குமார் - விளையாட்டுக்கழகம், செல்வி யூ.யுஸ்ஸின் -மாதர் அபிவிருத்திச் சங்கம், திருமதி வே. பாமா -மாதர் அபிவிருத்திச் சங்கம், வின்சன் சேச்சில் -சனசமூக நிலையம், ச.இரவீந்திரன் -சனசமூக நிலையம்.

✠✠✠ ✠✠✠ ✠✠✠

(யாழ்ப்பாணம்)

வேலணைப் பிரதேசத்தின் மண்கும்பான் மீள்குடியேற்ற கிராமத்தில் உள்ள பிள்ளையார் ஆலய மண்டபத்தில் வேலணைப் பிரதேச செயலர் எம்.நந்தகோபாலன் தலைமையில் நடைபெற்ற இராணுவ இணைப்புக் குழு அமைத்தல் கூட்டத்தில் பின்வருவோர் அங்கத்தவர்களாக தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

எஸ்.யோகேஸ்வரன் -கிராமசேவகர் J/11, திருமதி எஸ்.சூரியகலா -சமுர்த்தி உத்தியோகத்தர், வீ.சிவராசா - சமூகசேவை உத்தியோகத்தர், திருமதி என்.சரவுணபவானந்தன் - அதிபர் மண்கும்பான் அ.த.க.பாடசாலை.

எஸ்.கேரத் -கடற்படை அதிகாரிவேலணை, விஜயவீர -காவல்துறை உத்தியோகத்தர்- ஊர்காவற்றுறை, ந.கிருபாகரன் -விவசாயி, ந.தனபாலசிங்கம் -விவசாயி, செ.செல்வரட்ணம் -விவசாயி, யு.வினோதன் - மீன்பிடி, ந.கணேஸ்வரன் -கோயில், செல்வி சி.சுதாஜினி - மகளிர் மன்றம், திருமதி ஸ்ரீ.விஜயகுமாரி -மகளிர் மன்றம், க.சத்தியரூபன்- இளைஞர் கழகம். (ஓ-4)

# சிரமதானம் மூலம் வீதிகள் புனரமைப்பு

(ஊர்காவற்றுறை)

தீவகம் வடக்கு ஊர்காவற்றுறை கடற்கரை வீதி தீவக கடற்றொழிலாளர்களினால் சிரமதான மூலம் புனரமைக்கப்பட்டுள்ளது. அத்துடன் புனித யாகப்பர் வீதி தீவக பஸ் ஊழியர்களால் மரியதாஸ் தலைமையில் புனரமைக்கப்பட்டுள்ளது. (ஓ-72)

# பிரசாரப் பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

"விழுது" ஆற்றல் மேம்பாட்டு மையத்தினால் நடத்தப்படும் பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவதற்கான தேசிய பிரச்சாரப் பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவத்திற்கான தேசியப் பிரச்சாரத்தின் மூலோபாயக் குழுவினரும், சகல உள்ளூராட்சி மன்ற அமைப்புக்களும் சிவில் அமைப்புக்களும் பங்குபற்றவுள்ளன.

மேலும் அரசியலில் பெண்களின் பங்குபற்றலை ஊக்குவிக்கும் நடவடிக்கைகளை இந் நிறுவனம் பல வருட காலமாக மேற்கொண்டு வருகின்றமையும் குறிப்பாக உள்ளூராட்சி மன்றங்களின் பெண்கள் சரிசமமாகப் பங்கு கொள்ளவேண்டும் என்ற நோக்கத்துடன் பயிற்சித்திட்டங்கள் வெளியீடுகள் நேரடியான ஊக்குவிப்புக்கள் போன்றவற்றை செய்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கதாகும். (ஓ-4)

# செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டப் பாடசாலைகளில் க.பொ.த உயர்தர வகுப்புகளில் தமிழ்ப்பாடம் கற்பிக்கும் அனைத்து ஆசியர்களுக்குமான செயலமர்வு வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் இன்று சனிக்கிழமை முதல் 3 ஆம் திகதி வரை நான்கு நாட்கள் தினமும் காலை 8.30க்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இச்செயலமர்பில் குறிப்பிட்ட ஆசிரியர்கள் அனைவரும் தவறாது கலந்துகொள்ளுமாறு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கேட்டுக்கொள்கின்றார். (ஓ

# க.பொ.த.உயர்தரத்தில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் க.பொ.த உயர்தரத்தில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வுகள் கீழ்க்காணும் ஒழுங்கில் நடைபெறவுள்ளன.

பௌதிகவியல், வணிகக் கல்வி கணக்கியல், பொருளியல் ஆசிரியர்களுக்கான செயலமர்வு இன்று யாழ். இந்து மகளிர் கல்லூரியிலும் உயிரியில் ஆசிரியர்களுக்கான செயலமர்வு நாளை மறுநாள் ஞாயிற்றுக்கிழமை யாழ்.பல்கலைக்கழகத்திலும், இணைந்த கணிதம் ஆசிரியர்களுக்கான செயலமர்வு 14 ஆம் திகதி யாழ். பல்கலைக் கழகத்திலும் இடம்பெறவுள்ளது.

எனவே சகல ஆசிரியர்களையும் தவறாது அவ்வவ் செயலமர்வுகளில் கலந்து கொள்ளுமாறு யாழ்.வயலக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கேட்டுக்கொள்கின்றார். (ஓ-7)

# நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

அகவெளி குடும்ப வளத்துணை நிலையத்தால் நடத்தப்படும் எஸ்.கே. இராஜநாயகம் எழுதிய குடும்ப ஆற்றுப்படுத்தல் நூல் வெளியீட்டு விழா இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிக்கு யாழ் சென்பற் றிக்ஸ் வீதியில் அமைந்துள்ள குடும்ப வளத் துணை நிலையத்தில் அகவெளி இயக்குநர் அருட்பணி எஸ்.ஜே.இராஜநாயகம் தலை மையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராக உலக சுகாதார நிறுவனத்தின் ஆலோசகர் டாக்டர் என். சிவராஜா கலந்து சிறப்பிப்பதுடன் , சாந்திகம் நிறைவேற்றுப் பணிப்பாளர் எஸ்.வி.சங்கரப்பிள்ளை கலந்து கொள்ளவுள்ளார். (ஓ-4)

# வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் தரம் 9 க்கான ஆண்டிறுதிப் பரீட்சையும் தரம் 11 க்கான முன்னோடிப் பரீட்சையும்

(அல்வாய்)

வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் தரம் 9 மாணவர்களுக்கான ஆண்டிறுதிப் பரீட்சையும் தரம் 11 மாணவர்களுக்கான முன்னோடிப் பரீட்சையும் நடத்தப்படவுள்ளன.

இதில் தரம் 9 மாணவர்களுக்கான பரீட்சை எதிர்வரும் 17 ஆம் திகதி ஆரம்பமாகி 27 ஆம் திகதி வரையும் தரம் 11 மாணவர்களுக்கான பரீட்சை எதிர்வரும் 4 ஆம் திகதி ஆரம்பமாகி 11 ஆம் திகதி வரையும் நடைபெறவுள்ளன.

இதற்குரிய வினாத்தாள் பொதிகளை பாடசாலைகள் அவ்வவ் வலயங்களுக்கு குறித்த நேரத்திற்கு வருகைதந்து பெற்றுக் கொள்ளுமாறு வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் வி. இராசையா கேட்டுக் கொள்கின்றார். இப் பரீட்சைகளுக்கான நேர அட்டவணைகள் கீழே தரப்படுகின்றன.

| | | | |
|---|---|---|---|
| | **தரம் 9 ஆண்டிறுதிப் பரீட்சை** | | |
| நவ. 17 | 8.30 | - 10.30 | தமிழ்மொழி |
| | 11.00 | - 13.00 | வரலாறு |
| நவ. 18 | 8.30 | - 10.30 | விஞ்ஞானம் |
| | 11.00 | - 13.00 | புவியியல் |
| நவ. 19 | 8.30 | - 10.30 | ஆங்கிலம் |
| | 11.00 | - 13.00 | சமயம் |
| நவ. 20 | 8.30 | - 10.30 | கணிதம் |
| நவ. 21 | 8.30 | - 10.30 | வாழ்க்கைத் தேர்ச்சியும் குடியுரிமைக் கல்வியும் |
| | **தரம் 11 முன்னோடிப் பரீட்சை** | | |
| நவ. 04 | 8.30 | - 11.30 | தமிழ் I, II |
| | 12.30 | - 14.30 | தமிழ் III |
| நவ. 05 | 8.30 | - 11.30 | வரலாறு II |
| | 12.30 | - 13.30 | வரலாறு I |
| நவ. 06 | 8.30 | - 11.30 | சமயம் I, II |
| நவ. 09 | 8.30 | - 10.30 | கணிதம் I |
| | 11.30 | - 13.30 | கணிதம் II |
| நவ. 10 | 8.30 | - 9.30 | ஆங்கிலம் I |
| | 9.45 | - 11.45 | ஆங்கிலம் II |
| நவ. 11 | 8.30 | - 11.30 | விஞ்ஞானம் II |
| | 12.30 | - 13.30 | விஞ்ஞானம் I |

(ஓ-4-19)

# முகாமைத்துவ வலுவூட்டல் செயலமர்வு நாளை ஆரம்பம்

மாவட்டத்திலுள்ள சகல கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் கோட்டக் கல்வி அலுவலர்களுக்கும் முகாமைத்துவத்திறனை விருத்தி செய்யும் நோக்கத்துடன் முகாமைத்துவ வலுவூட்டல் செயலமர்வு நாளை ஞாயிற்றுக்கிழமை முதல் எதிர்வரும் 3ஆம் திகதி செவ்வாய்க் கிழமை வரை தினமும் காலை 8.30 மணிமுதல் 4.30 மணிவரை யாழ். வலய ஆசிரியர் நிலையத்தில் நடத்துவ்தற்கு மாகாணக் கல்வி திணைக்களத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இச் செயலமர்வில் கோட்டக் கல்வி அலுவலர்கள் மற்றும் நிர்வாகம், கல்வி முகாமைத்துவம் திட்டமிடல் அபிவிருத்தி ஆகிய துறைகளைச் சேர்ந்த பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள் ஆகிய உத்தியோகத்தர்களை தவறாது பங்கேற்பதற்கு அறிவுறுத்துமாறு சகல வலயக் கல்வி பணிப்பாளர்களையும் வடமாகாண கல்விப் பணிப்பாளர் வி. இராசையா கேட்டுக் கொள்கின்றார். (ஓ-4-19)




புதிதாக பதவியேற்ற யாழ்.மாநகர மேயர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசாவிற்கு RICHARDSON நிறுவனம் சார்பாக பிரதிநிதி ச.சசீகரன் மலர்ச்செண்டு வழங்கிக் கௌரவிப்பதையும், அருகில் யாழ்.மாநகர சபை அலுவலக உத்தியோகத்தர் நிற்பதையும் படத்தில் காணலாம்.

# ராகு கேது பெயர்ச்சி பலன்கள்

# 27.10.2009 முதல் 08.06.2011 வரை

## சிங்கம்

(மகம், பூரம், உத்தரம் – 1 ஆம் பாதம் வரை)

**நினைத்ததை நினைத்தபடியே முடித்துக் காட்டும் சிம்ம ராசி நேயர்களே!**

கொள்கைப் பிடிப்பு அதிகம் பெற்றவர்கள் நீங்கள். கோபத்தின் உச்சத்தில் நீங்கள் இருக்கும் பொழுது எதையும் எடுத்துச் சொன்னால் முடிக்க மாட்டீர்கள். சாந்தமாக இருக்கும் பொழுது எதைச் சொன்னாலும் சம்மதித்து உடனே முடித்துக் கொடுப்பீர்கள்.

பொல்லாதவர்களைப் போல நீங்கள் காட்சியளித்தாலும், போலியாகப் பேச மாட்டீர்கள். செய்வதைச் சொல்வோம், சொல்வதைச் செய்வோம் என்ற உறுதி மொழியைக் கடைப்பிடிப்பீர்கள். நிர்வாகத் திறமைக்கு எடுத்துக்காட்டாக விளங்குபவர் நீங்கள் தான்.

எதற்கும், யாருக்காகவும் விட்டுக் கொடுக்க மாட்டீர்கள். பணத்தைச் செலவழித்தாலும், உங்கள் குணத்தையும், மனத்தையும் மாற்ற முடியாது. இனத்தார், மதத்தார் என்று பாராமல் எல்லோருக்கும் உதவி செய்வீர்கள். இப்படிப்பட்ட உங்களுக்கு ராகு – கேதுக்களின் பெயர்ச்சி எப்படிப்பட்ட மாற்றங்களை வழங்கப் போகிறது என்பதைப் பற்றிப் பார்ப்போம்.

சொத்துக்களால் லாபம் பெற வைக்கும் ஐந்தாமிடத்து ராகு!

சொந்தங்களின் ஒத்துழைப்பைக் கூட்டும் லாப ஸ்தான கேது!

இதுவரை மகர ராசியில் சஞ்சரித்து வந்த ராகுவும், கடக ராசியில் சஞ்சரித்து வந்த கேதுவும் தனது வான் வெளிப் பயணத்தில் 27.10.2009 அன்று பின்னோக்கி வந்து உங்களது பிரச்சினைகள் தீர வழி செய்யப் போகிறார்கள்.

ஐந்தாமிடத்தில் சஞ்சரிக்கும் ராகுவும், பதினோறாமிடத்தில் சஞ்சரிக்கும் கேதுவும் பக்க பலமாக இருந்து உங்கள் சிக்கல்கள் தீர வழிகாட்டுவார்கள் என்று நம்பிக்கையோடு இருக்கலாம். புத்திர ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் ராகு பிள்ளைகள் வழியில் சுப விரயங்களை உருவாக்கும்.

வாயில் தேடி வரன்கள் வந்தும் விட்டுப் போகின்றனவே, கோவில் கோவிலாகச் சென்று கும்பிட்டதற்குப் பலன் எப்பொழுது கிடைக்கும், ஆயுள் நன்றாக இருக்குமா? ஆதாயம் போதிய அளவு வந்து சேருமா? என்றெல்லாம் சிந்தித்த உங்களுக்கு இப் பொழுது சிறப்பான பலன் கிடைக்கப் போகிறது.

பூர்வ, புண்ணியத்தின் வலிமையால் தீட்டிய திட்டங்கள் வெற்றி பெறும். திடீரென வரும் மாற்றத்தை ஏற்றுக் கொள்வீர்கள். ஸ்தல யாத்திரைகள் அதிகரிக்கும். வளர்ச்சிக்கு வித்திட்டவர்களைச் சந்தித்து முக்கிய முடிவெடுப்பீர்கள். எண்ணங்கள் எளிதில் செயலாகும். இந்த நேரத்தில் எடுத்த காரியங்களை எளிதில் முடிக்கும் வாய்ப்புக் கிட்டும்.

குரு வீட்டில் சஞ்சரிக்கும் ராகு குழப்பங்களை அகற்றும், கொள்கைப் பிடிப்போடு செயல்பட வைக்கும். பஞ்சம அஷ்டமாதிபதியான குருவின் வீட்டில் ராகு சஞ்சரிப்பதால், புத்திர விருத்தியை எதிர்பார்த்துக் காத்திருப்பவர்களுக்கு, குழந்தைப் பேறு கிட்டும் வாய்ப்பு உருவாகும்.

பழைய சொத்துக்களை விற்று புதிய சொத்துக்களை வாங்கும் வாய்ப்புக் கிட்டும். தூர தேசத்திலிருந்து வரும் வாய்ப்புகளை ஏற்றுக் கொள்வதா, வேண்டாமா என்று சிந்திப்பீர்கள். உத்தியோகத்தில் மாற்றலாகி வந்த இடமே திருப்தியாக இருக்கிறது, இனி மாறிக் கொள்ள வேண்டாம் என்று சிந்திப்பீர்கள்.

நல்ல மாற்றங்கள் இல்லம் தேடி வரவும், எல்லா நாட்களும் இனிய நாட்களாக மாறவும் சொல்லைச் செயலாக்கிக் காட்டவும் சுய ஜாதகத்தில் ராகு – கேதுக்கள் இருக்கும் இடம் அறிந்தும், அதன் பாதசாரம் மற்றும் பார்க்கும் விதம் அறிந்தும் அதற்குரிய யோகபலம் பெற்ற நாளில் உங்கள் ராசிக்கு உடனடிப் பலன்தரும் ஆலயங்களைத் தேர்ந்தெடுத்து முறையாக சர்ப்ப சாந்திப் பரிகாரங்களைச் செய்து கொள்வது நல்லது.

3,6,11 ஆகிய இடங்களில் ராகு – கேதுக்கள் சஞ்சரித்தால் முன்னேற்றமான வாழ்க்கை உண்டு என்று முன்னோர்கள் சொல்லி வைத்திருக்கிறார்கள். எனவே கண்ணேறு படும் விதத்தில் உங்கள் வாழ்க்கை அமையப் போகிறது. 11 ஆம் இடத்து கேதுவால் பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும். மூத்த சகோதரத்துடன் இருந்த பிரச்சினைகள் அகலும்.

மூதாதையர் சொத்துக்களால் இலாபம் கிட்டும். அரசியலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகளும், பதவிகளும் வந்து சேரலாம். எளிதில் லாபம் கிடைக்கும் விதத்தில் புதிய தொழிலைத் தொடங்குவீர்கள்.

அக்டோபர் 27 என்பது உங்கள் வளர்ச்சிக்கு வித்திடும் நாள். அன்றைய தினம் தான் ராகு என்ற மாபெரும் கிரகம் உங்கள் ராசிக்கு 5 ஆம் இடத்திலும், கேது என்ற கிரகம் உங்கள் ராசிக்கு 11 ஆம் இடத்திலும் சஞ்சரிக்கிறார்கள். ராசிநாதன் சூரியனின் காலில் ராகு சஞ்சரிக்கும் பொழுது நல்ல வாய்ப்புகள் இல்லம் தேடி வரும். நாட்டுப்பற்று மிக்கவர்களின் ஒத்துழைப்போடு உங்கள் வீட்டுப் பிரச்சினைகள் நல்ல முடிவிற்கு வரும். கூட்டாளிகள் இணக்கமாக நடந்து கொள்வர்.

தொட்ட காரியங்கள் வெற்றி பெறும். தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரிய நண்பர்கள் மட்டுமல்லாமல் உறவினர்களும் உதவிக்கரம் நீட்டுவர். செல்வாக்கு மேலோங்கும். புதிய ஒப்பந்தங்கள் அதிகரிக்கும். பூர்வீக சொத்துக்களால் கிடைத்த லாபத்தைக் கொண்டு புதிய சொத்துக்களை வாங்கிச் சேர்ப்பீர்கள். இடையூறு சக்திகள் அகலும். நீண்ட இடைவெளிக்குப் பிறகு விலகிச் சென்ற ஒருவர் விரும்பி வந்து இணைந்து பாதியில் நின்ற பணியை மீதியும் தொடர்ந்து செய்வார்.

உலாவரும் கிரகங்கள் நன்றாக இருந்தால் உங்களை ஒருவரும் ஒன்றும் செய்ய இயலாது. அந்த நிலை இப்போது இருப்பதால் அடுத்தடுத்து நல்ல சம்பவங்கள் இல்லத்தில் நடைபெறும். அடுத்தவர் நலனில் அக்கறை காட்டியதற்கு கிடைத்த ஆதாயத்தைப் பிறருக்குக் கொடுத்து உதவி செய்வீர்கள். வி.ஐ.பி.க்களின் வருகை அதிகரிக்கும்.

அதே சமயம் புனர்பூச நட்சத்திரக் காலில் வியாழன் சாரத்தில் கேது சஞ்சரிக்கத் தொடங்குகிறார். 26.05.2010 வரை குரு காலில் தான் கேது சஞ்சரிக்கிறார். குரு உங்கள் ராசிக்குப் பஞ்சம அஷ்டமாதிபதியாக விளங்குகிறார். இரண்டு ஆதிபத்யங்களில் ஒரு ஆதிபத்யம் யோகத்தைக் கொடுக்கும். மற்றொரு ஆதிபத்யம் விரயத்தைக் கொடுக்கும். கேது நின்ற வீட்டைப் பார்க்கும் போது அதன் புதன் வீடாக இருகின்றது.

புதன் உங்கள் ராசிக்கு 2, 11 க்கு அதிபதியாவார். தன லாபாதிபதியாக விளங்கும் புதனின் வீட்டில் கேது சஞ்சரிக்கும் பொழுது மிதமிஞ்சிய பொருளாதாரத்தை வழங்குவார். அதே நேரத்தில் வழங்கும் பொருளை உடனடியாக விரயம் செய்யும் சூழ்நிலையையும் ஏற்படுத்துவார். குறிப்பாகத் தொழிலில் இதுவரை வந்த இலாபத்தைக் காட்டிலும் அதிகப்படியான லாபத்தைக் காண்பீர்கள். புதிய தொழில்களுக்கு மூலதனம் போடுகிறீர்களா? என்று கேட்டு நண்பர்கள் நச்சரிப்பர்.

இதுவரை எதிர்பாராத அளவில் தொழில் வளம் பெருகுவது கண்டு உங்களுக்கே ஆச்சரியமாக இருக்கும். உத்தியோகஸ்தர்களுக்குப் பணி நிரந்தரம் ஆகவில்லையே என்ற கவலை மாறும். ஒருசிலர் உத்தியோகத்தில் வி.ஆர். எஸ். பெற்றுக் கொண்டு விருப்ப ஓய்வில் சுயதொழில் செய்ய முன்வருவர். எதிர்காலத் திட்டங்களை எளிதில் தீட்டுவீர்கள். வீட்டிற்குத் தேவையான விலை உயர்ந்த பொருட்களான தங்கம், வெள்ளி போன்றவைகளை வாங்கிச் சேர்ப்பீர்கள்.

பொதுவாக மூத்த சகோதரத்தால் ஏற்பட்ட தொல்லை அகலும். இதுவரை நாங்கள் விலகிச் சென்று விட்டோம், இனி இணைந்து செயல்படுவோம் என்று அவர்களாகவே இல்லம் தேடி வருவர். வரவு அதிகரிக்கும். வாங்கிய சொத்துக்களால் விலை ஏறும். அந்நிய தேசத் தொடர்பு ஆதாயம் தரும்.

30.09.2010 முதல் 8.6.2011 வரை மூலம் நட்சத்திரத்தில் கேது காலில் ராகு சஞ்சரிக்கிறார். அதே நேரத்தில் 4,9க்கு அதிபதியான செவ்வாயின் காலில் கேது சஞ்சரிக்கத் தொடங்குகிறார். எனவே கட்டிடம் கட்டும் முயற்சி கைகூடும். காரிய வெற்றிக்கு அரசியல் வாதிகள் உறுதுணையாக இருப்பர். விட்டில் போல் பறந்து, பறந்து சென்று பணியாற்றிய நீங்கள் இனி வீட்டில் ஓய்வெடுத்துக் கொண்டு தகுதியான நபரை வேலைக்கு வைத்துக் கொள்வீர்கள். பஞ்சாயத்துக்கள் சுமூகமாக முடியும்.

பல ஆண்டுகளாக நடைபெற்ற வழக்கில் திசை திருப்பம் ஏற்பட்டு வெற்றி தரும். ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும். அசையாச் சொத்துக்கள் சேர்ப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள். உத்தியோகத்தர்களுக்கு கௌரவப் பதவிகளும், வேண்டிய இடமாற்றமும் கிடைக்கும். ஆடை, ஆபரண சேர்க்கை உண்டாகும். எதிரிகள் மனம் மாறி இல்லம் தேடி வந்து உதவி செய்வர். நீண்ட நாட்களுக்கு முன்பு கொடுத்த கடன்கள் வசூலாகி மகிழ்ச்சியை வழங்கும்.

29.12.2009 முதல் 29.09.2010 வரை பூராட நட்சத்திரத்தில் சுக்ரன் சாரத்தில் ராகு சஞ்சரிக்கிறார். இதன் விளைவாக நல்ல வாய்ப்புகள் உங்களை நாடி வரப் போகின்றது. 3,10 க்கு அதிபதியான சுக்ரனின் சாரத்தில் ராகு சஞ்சரிக்கும் பொழுது முன்னேற்றங்கள் அதிகரிக்கும். மூடிக்கிடந்த தொழிலில் திறப்பு விழாக்களை நடத்துவீர்கள்.

அதே சமயத்தில் 'புனர்பூசம்' நட்சத்திரத்தில் வியாழன் காலில் கேது சஞ்சரிக்கிறார். மே 2010 க்கு மேல் திருவாதிரை நட்சத்திரத்தில் ராகு காலில் கேது சஞ்சரிக்கிறார். இதன் விளைவாக மாபெரும் மாற்றங்களையும், மறக்க முடியாத சம்பவங்களையும் நீங்கள் சந்திக்கப் போகிறீர்கள்.

ஆதிரையின் காலில் கேது சஞ்சரிக்கும் பொழுது அடுக்கடுக்காக நற்பலன்கள் நடைபெறும். தேசப்பற்று மிக்கவர்களும், தெய்வப்பற்று மிக்கவர்களும் வந்திணைவர். ஆசைகள் அனைத்தும் அரங்கேறும்.

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**

ஐந்தாமிடத்தில் சஞ்சரிக்கும் ராகு அற்புதப் பலன்களை அள்ளி வழங்கவும், பதினோறாமிடத்தில் கேது பணவரவைப் பெருக்கிக் கொடுக்கவும் ஞாயிற்றுக்கிழமை தோறும் சிவன் வழிபாட்டை மேற்கொள்ளுங்கள்.

பிரச்சினைகள் அகலவும், பெருமைகள் சேரவும் அர்ச்சனைகள் செய்ய ஆலயங்களை நோக்கிச் செல்வதோடு சுயஜாதக அடிப்படையிலும் சார பலம் பார்த்து சர்ப்ப சாந்திகளை செய்து கொள்வது நல்லது. சிவ கங்கை மாவட்டத்திலுள்ள நேமம் ஜெயம் கொண்ட சோழீஸ்வரர், சவுந்தர நாயகி அம்மனை வழிபட்டு பயமின்றி வாழுங்கள். (தொடரும்)

## இலங்கை சிறுவர்கள் தொடர்பில் செயற்பட ஐ.நா அகதிகள் பேரவை இணக்கம்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான உரிமைகள் பேரவையில் இலங்கைக்கான புதிய பிரதிநிதி மைக்கல் ஜேம்ஸ்ஸ்வோக் இலங்கை சிறுவர்கள் தொடர்பில் செயற்பட இணக்கம் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் வெளியுறவுத்துறை அமைச்சர் ரோகித்த போபொல்லாகம முன்னிலையில் நேற்று முன்தினம் தமது புதிய பதவியினை ஏற்றுக் கொண்டதன் பின்னர் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசாங்கத்துடன் இணைந்த வகையில் நலன்புரி நடவடிக்கைகளை மேற்கொள்ளப் போவதாக அவர் தெரிவித்துள்ளார்.

யுத்தம் நிறைவடைந்ததன் பின்னர் இந்தப் காலப்பகுதி வரையிலான அரசாங்கத்தின் மீள் குடியேற்ற நடவடிக்கைகளுக்கு ஒத்துழைத்தது போலவே இனிவரும் காலங்களிலும் தமது ஒத்துழைப்புகள் அமையும் என அவர் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் மீள் குடியமர்த்தப்பட்ட சிறுவர்களின் கல்வி நடவடிக்கைகள் தொடர்பில் அரசாங்கம் அவதானம் செலுத்த வேண்டும் என அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதற்கான அனைத்து ஒத்துழைப்புகளையும் ஐக்கிய நாடுகள் சபை வழங்கும் என அவர் உறுதியளித்துள்ளார். (ஓ-6)

## ஒத்துழைக்க மறுக்கும் இலங்கை அகதிகளை நாடு கடத்தப் போவதாக இந்தோனேசியா எச்சரிக்கை

இந்தோனேசியாவின் சுமத்திரா தீவுக் கப்பால் படகில் பயணித்த வேளை பிடிபட்ட 78 இலங்கை அகதிகளும் தம்மை அடையாளப்படுத்த அதிகாரிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கத் தவறும் பட்சத்தில் நாடு கடத்தப்படுவார்கள் என அந்நாட்டு அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

மேற்படி 78 இலங்கையர்களும் 12 நாட்களுக்கு முன்பு அவுஸ்திரேலியாவைச் சென்றடையும் முகமாக படகில் இந்தோனேசிய கடற்பரப்பில் பிரவேசித்த சமயம் அவுஸ்திரேலிய சுங்கப் பிரிவு கப்பலான ஓசியானிக் வைகிங்கில் ஏற்றப்பட்டனர்.

இந்நிலையில் மேற்படி இலங்கைத் தமிழ் அகதிகள் அவுஸ்திரேலிய சுங்கப் பிரிவு கப்பலை விட்டு வெளியேற மறுத்துள்ளனர்.

இந்தோனேசிய தடுப்பு நிலையமொன்றுக்கு அகதிகளை மாற்றுவது சம்பந்தமான உடன்படிக்கையொன்று தொடர்பில் அவுஸ்திரேலியாவும் இந்தோனேசியாவும் கடந்த வாரம் இணக்கம் கண்டமை குறிப்பிடத்தக்கது. (ஓ-6)

யாழ்ப்பாணப் பல்கலைக்க

முகாமைத்துவ கற்கை

# இணையவழி மூலமான வியாப

# (Bachelor of Business Management (

demp

Distance Education Modernisation Project

## ஆரம்ப நிகழ்வு சிற

## துணைவேந்தரின் வாழ்த்து



எங்கள் தொலைக்கல்வி வரலாற்றில் புதிய அத்தியாயமாய் இணையத்தள வழியூடான வியாபார முகாமைத்துவ கற்கைநெறியினைத் தொடக்கி வைப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் துணையுடனான தொலைக்கல்வி நவீனமயமாக்கத் திட்டத்தின் கீழ் தமிழ்மொழி மூலமான இந்தக்கல்வி வாய்ப்பு கைவசமாகின்றது.


சர்வதேச நிபுணர்களின் வழிகாட்டலில் இந்தக் கற்கைநெறிக்கான கலைத்திட்டம், பாடப்பொருள் வழவமைப்பு ஆகியவற்றினை எங்கள் முகாமைத்துவ வணிக பீட ஆசிரியர் குழாம் நிறைவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

உயர்கல்வி விரிவாக்கத்தின் மைல்கல்லாகும். இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் வெற்றிக்காய் உழைத்த அனைவருக்கும் இதன் பயன் கனிகளின் சொந்தக்காரருக்கும் மாணவர்களுக்கும் என் அன்பு வாழ்த்துக்கள்.

பேராசிரியர் நா. சண்முகலிங்கம்
துணைவேந்தர்,
யாழ். பல்கலைக்கழகம்

## Message From:

**Dr.Sanath Jayasena**
**Course Design Consultant**
**Distance Education Modernization Project (DEMP)**



Launching of the Bachelor of Business Management (BBM) on-line external degree program is indeed a historic event for the University of Jaffna, the DEMP as well for the whole country. The fact that this is the first ever online degree program offered in Tamil medium is of great importance. I congratulate the University of Jaffna for being able to launch this after years of work in challenging and difficult conditions.

We have been providing training and support towards this, in addition to the grant funds from DEMP. This includes workshops in Jaffna back in 2006, several workshops and training sessions in Colombo and continuous support until now. DEMP also funded the Tamil translation of the *Moodle* learning management system (LMS), without which this program would not be possible to be offered in Tamil.

As the consultant assigned to coordinate with the University of Jaffna, I am very pleased to see that finally the program is launched. I also value the relationships we established with the colleagues at the University of Jaffna during this process. I wish to congratulate the first batch of students who were selected to follow this program and wish everyone involved in the program success. I earnestly hope the University will start more online educational programs in the future and make quality higher education accessible to all who would otherwise be deprived of it.

## Message From:

**Project Manager**
**Distance Education Modernisation Project**
**Ministry of Higher Education**




It is with great pleasure I use this opportunity to congratulate University of Jaffna on the launching of the Bachelor of Business Management (BBM) Online programme. This is a historical event in Sri Lanka as BBM became the first ever online programme launched through National Online Distance Education Service (NODES) in Tamil medium. It is very timely to launch an online programme in Tamil medium during the present post war period where many Tamil youth across the country who were compelled to miss out on the opportunity for further education would find it very useful.

The University of Jaffna being one of the most prestigious universities in Sri Lanka must play the lead role in disseminating more and more Tamil programmes online which will pave way not only for Tamil speaking people who live in Sri Lanka but also for many others overseas. Let me warmly wish all the very best to the Vice Chancellor, Deans, Heads of Departments and all academic and non-academic staff of University of Jaffna for successful implementation of this programme.

## Message From:

**N.S.Abeyawardena**
**Project Director**
**Distance Education Modernization Project**



The Distance Education Modernization Project (DEMP) funded by the Asian Development Bank (ADB) was commenced by the government in 2003 and is effective till 2009. Project's aim is to boost enrollment, quality and relevance of learning through distance education so that it will immediately facilitate on- line distance education delivery through National On- line Distance Education Service (NODES) composed of a national distance education ICT network and numerous Multimedia Access Centres (NACs) established in various parts of the country. There are over 34 Partner Institutions including 6 conventional Universities, the University of Jaffna and many Private Institutions and Professional Associations engaged in the development and delivering of 42 on- line degrees/ diplomas and post graduate programmes through NODES receiving financial and technical assistance from DEMP.

Launching of the "Bachelor of Business Management" on-line programme in **Tamil Language** by the University of Jaffna is a positive move towards the nati[illegible] cause in improving the quality of the Managers and Professionals of the cou[illegible] epecially in northern and eastern provinces. I wish to congratulate University [illegible] Jaffna for initiating a significant course through on- line learning.

## வியாபார முகாமைத்துவமாணி கற்கைநெறி இணைப்பாளரின் வாழ்த்துச் செய்தி



யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடமானது இணையவழி மூலமான வியாபார முகாமைத்துவமாணிக் (வெளிவாரி) கற்கை நெறியை ஆரம்பிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். உயர்கல்வி அமைச்சின் கீழ் செயற்படுத்தப்படும் தொலைக் கல்வி நவீன மயமாக்கல் திட்டத்தின் (DEMP) தேசிய இணையவழித்தொலைக்கல்விச் சேவையின் (NODES) அனுசரணையுடன் இக்கற்கை நெறி ஆரம்பிக்கப்படுகின்றது. ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் நாட்டில் பல்வேறு இணையவழி மூலமான கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் உலகிலேயே இணையவழியில் முதல் தமிழ்மொழி மூலமான முகாமைத்துவ பட்டப்படிப்புக்கற்கைநெறியின் முதலாவது அணியை வரவேற்பதிலும், இக்கற்கை நெறிக்கான பாடஅலகுகளை நிறைவு செய்து வழங்குவதிலும் இணைப்பாளர் என்ற ரீதியில் பேருவகையும் பெருமிதமும் கொள்கின்றேன். [illegible]06 ஆம் ஆண்டு இத்திட்டம் முன்னெடுக்கப்பட்ட போதும் தேக்கநிலையிலிருந்த இக்கற்கை நெறியை 2009 டிசம்பர் DEMP திட்டம் முடிவுக்கு வரமுன்னர் ஆரம்பிக்க வேண்டுமென்ற முனைப்புடன் பல்வேறு இடர்களுக்கு மத்தியில் எமது பீடாதிபதி திரு. க. தேவராஜாவின் முழுமையான ஒத்துழைப்புடனும் சக விரிவுரையாளர்களின் ஆதரவுடனும் என்னால் வெற்றிகரமாக மேற்கொள்ள முடிந்துள்ளது. மேலும் இக்கற்கை நெறியை இன்று இந்நிலையில் ஆரம்பித்து வைப்பதற்கு எனக்கு உறுதுணையாக இருந்த சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி சாந்தகுமாரி மகேந்திரனையும் தொழில்நுட்பரீதியாகவும் ஏனைய வழிகளிலும் உதவிகளைப் புரிந்து எமது பீடத்தின் கணனி போதனாசிரியர் திரு. க. சியந்தனையும் மற்றும் எமது பல்கலைக்கழக கணனி பிரிவைச் சேர்ந்த அனைவரையும் வெளிவாரி அலகு பிரிவினரையும் எமது துறையின் ஏனைய விரிவுரையா ளர்களையும் இச்சந்தர்ப்பத்தில் நன்றியுடன் நினைவு கூரக் கடமைப்பட்டுள்ளேன். அத்துடன் எமது துணை வேந்தர் பேராசிரியர் N. சண்முகலிங்கன் அவர்களின் ஆதரவுடனும் ஆசியுடனும் இக்கற்கை நெறி ஆரம்பிக் கப்படுவதையிட்டு நான் பெருமிதம் கொள்கின்றேன்.

மேலும் எமது கற்கை நெறியை வடிவமைப்புச் செய்வதற்கான பல்வேறு உபகரணங்களையும் இணையவழி தொடர்பிலான அறிவையும் பயிற்சியையும் வழங்கிய (DEMP) திட்டத்தின் இயக்குனர் வள ஆலோச கர்கள் அனைவரையும் நாம் இவ்விடத்தில் நினைவு கூர வேண்டும் . குறிப்பாக எமது யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திற்கான ஆலோசகராக 2005 ஆம் ஆண்டிலிருந்து கடமைபுரிந்து வரும் கலாநிதி சனத்ஜெயசேன விற்கு முக்கியமாக நன்றி கூறக்கடமைப்பட்டுள்ளோம். அவரது அயராத முயற்சியும் ஆலோசனைகளும் எம்மை இன்று இத்தகைய உன்னத நிலைக்கு இட்டுச் சென்றுள்ளது என்பதில் ஐயமில்லை . உலக நாடு களில் வசிக்கும் பல்லாயிரம் தமிழ் மாணவர்களுக்கும் இது ஒரு வரப்பிரசாதம் என்பதில் ஐயமில்லை. மேலும் இவர்கள் இதில் இணைந்துகொள்ள ஏதுவாக உலகெங்கும் எமது பல்கலைக்கழகம் கற்றல்மையங் களை நிறுவ எல்லாம் வல்ல இறைவன் துணை புரிய பிரார்த்திக்கின்றேன். இக்கற்கை நெறி வெற்றிகரமாக செயற்பட்டு தனது இலக்குகளை அடைய வாழ்த்துகின்றேன்.

திருமதி ரதிராணி யோகேந்திரராஜா
இணைப்பாளர்
வியாபார முகாமைத்துவமாணிக் கற்கை நெறி

விளம்பர அனுசரணை :-

BOC

ලංකා බැංකුව இலங்கை வங்கி

தேசத்தின் வங்கியான

இலங்கை வங்கி

மேந்தரக் கிளை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

# விஜய நகரப் பேரரசு

## 40

இத்தனை இன்னல்களுக்கிடையிலும் திருமலை விஜயநகரப் பேரரசின் பெரும் பகுதியைத் தன்னுடைய ஆதிக்கத்திலேயே வைத்திருந்தான். தென்னாட்டு நாயக்கர்களுடைய புதிய நிலையை அவன் வெளிப்படையாக அங்கீகரிக்கவில்லையெனினும், நடைமுறையில் அதனை ஏற்றுக்கொண்டு, அவர்களைத் தன்னுடைய நண்பர்களாக்கிக் கொண்டான். மைசூரில் ஆட்சி செய்த வாடியார்களும், வேலூர், கேலடி ஆகிய இடங்களில் ஆட்சி செய்த நாயக்கர்களும் இன்னும் பேரரசின் மேலாதிக்கத்தை ஏற்றுக்கொண்டவர்களாகவே இருந்தார்கள். தமிழ், தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகள் வழங்கிய மண்டலங்களின் நிர்வாகத்தைப் பொதுவாக மேற்பார்வை செய்வதற்கும் பேரரசின் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்கும் தனித்தனி அரச பிரதிநிதிகளைத் திருமலை நியமித்தான். தெலுங்கு நாட்டுக்குப் பெனுகொண்டாவைத் தலைநகராக்கி அதற்குத் தன் மூத்த மகன் சீரங்கனை அரச பிரதிநிதியாக நியமித்தான்.

கன்னட நாட்டுக்குத் தன் இரண்டாம் மகன் ராமனை அரச பிரதிநிதியாக நியமித்து, சீரங்கப் பட்டணத்தை அந் நாட்டின் தலைநகராக்கினான்; தமிழகத்துக்குச் சந்திரகிரி யைத் தலைநகராக்கி அங்கு தன் கடைசி மகன் வேங்கடபதியை அரச பிரதிநிதியாக நியமித்தான். அவன் "நலிவுற்ற கர்நாடகப் பேரரசுக்குப் புத்துயிரூட்டியவன்" என்னும் பட்டப் பெயரை வைத்துக்கொண்டு 1570 ஆம் ஆண்டில் பேரரசனாக முடிசூடிக் கொண்டான்.

ஆனால், அப்போதே அவன் முதுமை எய்தியவானயிருந்தான் அதனால், அவன் சிறிது காலம் ஆட்சிசெய்த பின் அரச பதவியைத் துறந்துவிட்டான் என்பது தெரிகிறது. அதனால் அவனுடைய மூத்த மகன் சீரங்கன் 1572 இல் அரசன் ஆனான். பேரரசின் எல்லைகள் சுருங்கிவிட்டன. எனினும், அது புத்துயிர் பெற்று மீண்டுமொரு நூற்றாண்டு நிலைத்து நின்றதற்குத் திருமலையின் முயற்சியே காரணமாயிற்று.

சதாசிவனுடைய கதி என்னவாயிற்று என்று நமக்கு உறுதியாகத் தெரியவில்லை. அவனைத் திருமலையின் மக்களுள் ஒருவன் கொலைசெய்து விட்டானென்று 1567 இல் சீசர் பிரடரிக் கேள்விப்பட்டார். ஆனால், அது புதிய அரவீடு அரச மரபினரை விரும்பாத பகைவர்கள் கட்டிவிட்ட கதையாக இருக்குமென்று நாம் கருதலாம். சதாசிவன் பணிவிணக்கமான இயல்புடையவன். அவனால் யாருக்கும் தீங்கு நேராது என்பதை அனைவரும் அறிந்திருந்தனர். எனவே, அவனைக் கொலை செய்யவேண்டிய அவசியம் நேர்ந்திருக்காது.

## கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் நடந்த ஆய்வரங்கச் சிறப்புரைகள் - 2009

அவன் சிறையிலேயே வாடி இறுதியில் இயற்கை மரணத்தை எய்தினான் என்று நினைப்பது பொருத்தமாக இருக்கும். 1576 ஆம் ஆண்டு வரையில் வெளியிடப் பெற்ற பொறிப்புகளில் அவனுடைய பெயரை நாம் காண்கின்றோம்.

திருமலை 1578 வரையில் உயிரோடிருந்தானெனினும் அவனுடைய மகன் முதலாம் சீரங்கன் 1572 ஆம் ஆண்டிலிருந்தே அரசனாக இருந்தான். பேரரசின் வலிமையை மீண்டும் நிலைநாட்டும் பணியை அவன் தொடர்ந்து செய்தான்.

ஆனால், அந்த முயற்சிக்கப் பல இடையூறுகள் நேர்ந்தன. அன்றியும் முஸ்லிம் அரசர்களுள் இருவர் பேரரசின் மீது மீண்டும் படையெடுத்துச் சில பகுதிகளைப் பிடித்துக் கொண்டனர். 1576 இல் அலி அடில்ஷா ஆதோனியிலிருந்து ஒரு படையை அனுப்பிப் பெனுகொண்டாவை முற்றுகையிட்டான். தன்னுடைய தலைநகரைக் காக்கும் பணியைத் திறமைமிக்க தளபதி சென்னப்பனிடம் ஒப்படைத்துவிட்டுச் சீரங்கன் கருவூலத்திலிருந்த செல்வங்களை எடுத்துக்கொண்டு சந்திரகிரிக்குச் சென்றுவிட்டான். முற்றுகையைச் சென்னப்பன் மூன்று மாதம் சமாளித்தான்.

அதற்குள் சீரங்கன் கோல்கொண்டா சுல்தானுடைய துணையை நாடினான். அவனும் துணைக்கு வர இசைந்தான். அன்றியும், சீரங்கனே பெனுகொண்டாவுக்கு ஒரு படையை அனுப்புவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தான். மேலும், அடில்ஷாவினுடைய இந்துத் தளபதிகளுள் ஒருவனைச் சீரங்கன் தன் பக்கம் இழுத்துக் கொண்டான். அந்த நடவடிக்கைகளின் விளைவாக சென்னப்பன் 1576 டிசம்பர் 21 ஆம் நாள் அடில்ஷாவை வென்றான். அதனால் அடில்ஷா பிஜப்பூருக்குத் திரும்பிப் போய்விட்டான்.

ஆனால் அடுத்த மூன்றாண்டுகளுக்குள் இப்ராஹிம் குதுப்ஷா சீரங்கனோடு அண்மையில் செய்து கொண்ட உடன்படிக்கையைப் புறக்கணித்துவிட்டு விஜயநகரப் பேரரசின் மீதுபடையெடுத்தான். சீரங்கனை வெறுத்த பிரபுக்கள் சிலரோடு குதுப்ஷா ரகசிய ஒப்பந்தம் செய்திருக்கக் கூடும் என்று நினைக்க இடமிருக்கிறது.

எனவே, அவர்கள் கொடுத்த தகவலின் பேரில் அவன் தக்க சமயம் பார்த்துப் பேரரசின் மீது தன் தாக்குதலைத் தொடங்கினான் என்று நாம் நினைக்கலாம். கோல்கொண்டா சுல்தானுடைய சேனையில் பதவி வகித்த முரஹரிராவ் என்னும் மராட்டியப் பார்பனன் அஹோபலத்திலுள்ள செல்வமிகுந்த நரசிம்மர் கோயிலைக் கொள்ளையடித்தது மட்டுமன்றி விஜயநகருக்கு சொந்தமான பல ஊர்களையும் சூறையாடி அவற்றைக் கைப்பற்றிக் கொண்டான்.

ஆனால், அந்த ஊர்கள் எல்லாவற்றையும் விஜயநகரப் படைகள் பின்னர் மீட்டுக் கொண்டன.

கோல்கொண்டா சுல்தான் மீண்டும் படையெடுத்துக்கொண்ட வீட்டுக்கு அருகிலிருந்த பகுதியைத் தாக்கினான். விஜயநகரப் படைகளுக்கும் கோல் கொண்டாப் படைகளுக்கும் வினுகொண்டா, கொண்டவீடு, சந்திரகிரி ஆகிய கோட்டைகளுக்கும் அருகில் போர் நடந்தது. அந்தக் கோட்டைகள் அனைத்தையும் சீரங்கன் கைப்பற்றிக் கொண்டதாக அவனுடைய பொறிப்புகள் கூறுகின்றன.

எனினும் உண்மையில் இப்ராஹிம்தான் பல வெற்றிகளைப் பெற்றுப் பல ஊர்களைப் பிடித்துக்கொண்டான் என்பது தெரிகிறது. அவ்வாறு அவன் அப்போது கைப்பற்றிய பகுதிகளை விஜயநகரம் பின்னர் மீட்கவேயில்லை. சீரங்கன் வெற்றி பெறாததற்குப் பல காரணங்கள் இருந்தன. பேரரசு நடைமுறையில் பல பகுதிகளாகப் பிரிந்து போயிருந்தது.

அவனுடைய சகோதரர்கள் அவனுக்குத் துணைபுரியவில்லை. பிரபுக்களுக்குள் பல கட்சிகள் இருந்தன. அதனால், அவர்கள் ஒருவரோடொருவர் சச்சரவிட்டுக் கொண்டிருந்தார்கள். மேலும், அவர்களுள் பலர் முஸ்லிம் அரசர்களோடு ரகசியத் தொடர்பும் வைத்திருந்தனர்.

பேராசிரியர்
**க.அ.நீலகண்டசாஸ்திரிகள்**

அதனால் பேரரசின் வலிமை குறைந்து போய்விட்டது. சீரங்கன் 1585 இல் பிள்ளையில்லாது இறந்து போனான். அப் போது அவனுடைய கடைசித் தம்பி வேங்கடன் அரசனானான். திருமலையின் ஆட்சிக் காலத்தில் வேங்கடனுடைய தமையனான ராமன் சீரங்கப் பட்டணத்தின் அரச பிரதிநிதியாய் இருந்தான் என்பதை நாம் முன்பு கண்டோம். அவனுக்கு ஆண் மக்கள் இருவர் இருந்தார்கள். ஆனால், அவர்கள் இளவயதினராய் இருந்தார்கள். அப்போதிருந்த நிலையில் முதிர்ச்சியும் ஆற்றலும் உடைய ஒருவன் அரசனாக இருப்பது இன்றியமையாததாக இருந்தது. (தொடரும்)

# வங்கிகளில் வட்டிவீதக் குறைப்பு ; தேர்தலில் வெற்றியீட்டுவதற்கான சூழ்ச்சி

## விரைவில் இவை உயர்த்தப்படும் என்கிறது ஐ.தே.க.

(கொழும்பு)

ஜனாதிபதியினால் அறிவிக்கப்பட்டுள்ள வட்டி வீத குறைப்பின் காரணமாக அரச வங்கிகள் வங்குரோத்து நிலையை அடையக் கூடுமென ஜக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது.

கடன்களுக்கான வட்டி வீதம் திடீரென குறைக்கப்படுவதனால் அரச வருமானத்தில் வீழ்ச்சி ஏற்படக் கூடுமென ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

இந்த நடவடிக்கையின் மூலம் 70 பில்லியன் முதல் 140 பில்லியன் வரையில் நட்டம் ஏற்படக் கூடுமென அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இந்தத் திடீர் வட்டி வீத குறைப்பின் காரணமாக அரச வங்கிகள் சில நட்டத்தை எதிர்நோக்க நேரிடும் என அவர் குறிப்பிட்டுள்ளார். 5 பில்லியன் வருமானத்தை ஈட்டி வந்த மக்கள் வங்கி இந்த வட்டி வீதக் குறைப்பினால் 1.9 பில்லியன் நட்டத்தை எதிர்நோக்க நேரிடலாம் என அவர் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் முக்கிய நிறுவனங்கள் பல ஏற்கனவே நட்டத்தை எதிர்நோக்கி வரும் வேளையில் இந்த வட்டி வீத குறைப்பு பொருளாதாரத்தில் பாதக விளைவுகளை ஏற்படுத்தும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த வட்டி வீத குறைப்பினை ஓர் தேர்தல் சூழ்ச்சியாக தாம் கருதுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

தேர்தல்களில் வெற்றியீட்டும் நோக்கில் இவ்வாறான வட்டி வீதக் குறைப்புக்களை அறிமுகப்படுத்துவதாகவும் விரைவில் வட்டி வீதங்கள் உயர்த்தப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஓ-6)




வடமராட்சி லயன்ஸ் கழக ஏற்பாட்டில் நடைபெற்ற மரம் நடுகை நிகழ்வில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் ப.ஜெயராசா வைத்தியசாலைப் பகுதியில் மரம் நாட்டுவதையும் அருகில் வைத்தியசாலை நிர்வாக அதிகாரி விக்னேஸ்வரமூர்த்தி மற்றும் லயன்ஸ் கழக உறுப்பினர்கள் நிற்பதையும் படத்தில் காணலாம். (படம்:வடமராட்சி நிருபர்)

# குருதிக் கொடையாளர் கௌரவிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலை இரத்த வங்கியில் தொடர்ச்சியாக இரத்த தானம் செய்து வரும் தன்னார்வ குருதிக் கொடையாளர்களை கௌரவிக்கும் நிகழ்வு இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு பிரதான வீதியில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் நடைபெறவுள்ளது.

இதில் 2008-2009 காலப்பகுதியில் முதல் முறையாக 10, 20 தடவைகளுக்கு மேல் இரத்ததானம் செய்த தன்னார்வ குருதிக் கொடையாளர்கள் கௌரவிக்கப்படவுள்ளார்கள்.

இரத்த வங்கியிலும், நடமாடும் இரத்ததான முகாம்களிலும் தொடர்ச்சியாக இரத்ததானம் செய்யும் ஏனைய தன்னார்வ குருதிக் கொடையாளர்களை இவ் கௌரவிப்பு விழாவுக்கு வருகை தந்து விழாவை சிறப்பிக்குமாறு யாழ். போதனா வைத்தியசாலை இரத்த வங்கி வைத்திய அதிகாரி இ. சிவசங்கர் கேட்டுக் கொள்கின்றார். (ஓ)


## யா/ ஸ்கந்தவரோதயா கல்லூரி

சுன்னாகம்.

### நிறுவுநர் நினைவுநாளும் பரிசளிப்பு விழாவும்

காலம் :- 31.10.2009 சனிக்கிழமை காலை 9.00 மணி
இடம்:- ஒறேற்றர் மண்டபம்.
தலைவர் :- திரு. ஆறு.திருமுருகன் (அதிபர்) அவர்கள்
பிரதம விருந்தினர்: பேராசிரியர். நா.ஞானகுமரன் B.A.(Hons)M.phil,Phd அவர்கள்
(கலைப்பீடாதிபதி - யாழ்.பல்கலைக்கழகம்)
சிறப்பு விருந்தினர்: வழக்கறிஞர். திரு.செல்லையா தங்கராஜா Bsc,LLB.Advocate அவர்கள்
(பழையமாணவர்-ஸ்கந்தவரோதயா கல்லூரி)
(பேரவை உறுப்பினர் -கொழும்பு பல்கலைக்கழகம்)
ஆசியுரை: திரு.க.சிவாஜி அவர்கள்
(முன்னாள் அதிபர் -ஸ்கந்தவரோதயா கல்லூரி)
நினைவுப்பேருரை: திரு.சு.பரமநாதன் அவர்கள்
(இளைப்பாறிய செயலாளர் மாவட்ட சபை யாழ்.மாவட்டம்
தலைவர் -ஸ்கந்தா பழைய மாணவர் சங்கம்)
நிறைவுரை: திரு.சி.மகேந்திரன் (பிரதி அதிபர்) அவர்கள்


அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

ஸ்கந்தவரோதயாக் கல்லூரி,
கந்தரோடை, சுன்னாகம்.
021 2240230

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்

(3864)





CISCO-CCNA பயிற்சிநெறியின் முதல்இரு அணிகளின் பயிற்சி நிறைவும் கலந்துரையாடலும் கடந்த 18 ஆம் திகதி MCS கணனி நிறுவனத்தில் நடைபெற்றது. கொழும்பு WinSys நிறுவனமும், யாழ்.MCS நிறுவனமும் இணைந்து நடாத்திய இப் பயிற்சி நெறியில் பயிற்சி நெறியைப் பூர்த்திசெய்த ஐ.நா.அபிவிருத்தித் திட்ட தகவல் தொழில்நுட்ப பகுதியைச் சேர்ந்த சதீஸிற்கு யாழ்.வர்த்தக வங்கி முகாமையாளர் ரவீந்திரா சான்றிதழ் வழங்குவதை முதலாவது படத்திலும், பயிற்சிநெறியைப்பூர்த்தி செய்த மாணவர்களுடன் விரிவுரையாளர்களை இரண்டாவது படத்திலும் காணலாம்.

## முன்பள்ளி ஆசிரியர்களிற்கான புத்தூக்கப் பயிற்சி நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

கொழும்பு றோட்டறிக் கழகம் நடாத்தும் முன்பள்ளி ஆசிரியர்களிற்கான புத்தூக்கப் பயிற்சி நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இப்பயிற்சியில் கோப்பாய்க் கோட்ட முன்பள்ளி ஆசிரியர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (6-14)

## ஒப்பந்தகாரர்களுக்கான கலந்துரையாடல்

(வடமராட்சி)

யாழ்.மாவட்ட ஒப்பந்தகாரர்களுக்கான நிர்மாண ஒப்பந்த வேலைகள் தொடர்பான கலந்துரையாடல் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு ஆனைப்பந்தியிலுள்ள சங்க அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. எனவே சகல ஒப்பந்தகாரர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு சங்க நிர்வாகம் கேட்டுள்ளது. (6-10)




## அகத்தியர் தேவாரத் திரட்டு முற்றோதல்

அகில இலங்கைத் திருமுறை மன்றம் மாதாந்த பூரணைத் தினத்தில் நடத்திவரும் "அகத்தியர் தேவாரத் திரட்டு முற்றோதல்", "பன்னிரு திருமுறைப் பாராயணம்" எதிர்வரும் 2ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8 மணிக்கு திருநெல்வேலி கிழக்கு அருள்மிகு ஸ்ரீ வெள்ளைப்பிள்ளையார் ஆலயத்தில் ஆலய பரிபாலன சபையினரின் அனுசரணையுடன் மன்றத் தலைவர் பண்டிதர் வ.பேரின்பநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது. (ஓ)

## வருடாந்தப் பொதுக்கூட்டம்

(சாவகச்சேரி)

வடமராட்சி திருச்சபைகளின் வருடாந்தப் பொதுக்கூட்டம் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கரவெட்டி பிரதேச செயலக மண்டபத்தில் ந.தேவபாலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய் தேவசபையைச் சேர்ந்த வண. றொபேட் பாலசிங்கம் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (6-4-29)

## மாணவர்கள் விபரம் கோரல்

(சாவகச்சேரி)

வவுனியா நலன்புரி நிலையங்களிலிருந்து வந்து தென்மராட்சிப் பாடசாலைகளில் கல்வி பயின்று வரும் மாணவர்களுக்கு சீருடை மற்றும் கல்வி உபகரணங்கள் வழங்குவதற்கு ஏதுவாக மாணவர்களது விபரங்களை வடமராட்சி வலயக் கல்வி பணிமனையில் கணக்காளரிடம் ஒப்படைக்குமாறு பாடசாலை அதிபர்களை வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் கேட்டுக்கொள்கின்றார். (ஓ-4-29)

# மாகாண மட்ட தொழிற்துறை கண்காட்சியில் பரிசில் பெறுவோர்

*(நேற்றைய தொடர்ச்சி)*

**கல் ஆபரணங்கள்**

கே.விஜயகுமார்(தெல்லிப்பழை) 1ஆம் இடம், கே.கல்பனா (தெல்லிப்பழை) 2ஆம் இடம் , கே.ராஜகோபால் (யாழ்ப்பாணம்) 3 ஆம் இடம்

**முத்து ஆபரணம்**

கே. கேமலா (யாழ்ப்பாணம்) ஆறுதல் பரிசு

**இசைக் கருவிகள்**

எம்.பார்த்தீபன் (உடுவில்) 1 ஆம் இடம்.

**ஏனைய பொருட்கள்**

என்.புலேந்திரன் (யாழ்ப்பாணம்) 1ஆம் இடம்,பி.சிவப்பிரகாசம் (யாழ்ப்பாணம்) 2,7 ஆம் இடம்,எஸ்.தயாபரன் (யாழ்ப்பாணம்) 3ஆம் இடங்கள்,வி.சோமேஸ்வரி (உடுவில்) 4,6 இடங்கள், ரி. பீற்றா பெனாடிக் (சண்டிலிப்பாய்) 5ஆம் இடம், எஸ்.சங்கீதா (யாழ்ப்பாணம்) 8 ஆம்இடம்.

**ஏனைய மர வேலைகள்**

ஆர்.கரிகாலன் (உடுவில்) 1ஆம் இடம், கே.ஜசிகரன் (உடுவில்) 2ஆம் இடங்கள்)

**கைத்தறிப் பொருட்கள்**

**படுக்கை விரிப்பு**

பி.ரஜேந்தினி (சங்கானை) 1ஆம் இடம், ஆர்.வனஜா (கரவெட்டி) 2ம் இடம்,எஸ்.சுசீலா (தெல்லிப்பழை) 3ஆம்இடம், கே.நிரோஜன் (கரவெட்டி) எஸ்.சிவகுமார்( தெல்லிப்பழை ) ஆறுதல்பரிசு.

**துவாய்**

பி.ராஜேஸ்வரி (வவுனியா) 1ஆம்,3ஆம் இடங்கள்,எஸ்.சுசீலா (தெல்லிப்பழை) 2ஆம் இடம்.

**சாறி**

ஜி. மல்லிகாவதி (வவுனியா) 1,2 ஆம் இடங்கள் ,சாந்தரூபி (சாவகச்சேரி) 3ஆம் இடங்கள்,எம். தயாநிதி (கரவெட்டி) ஆறுதல் பரிசு,எஸ். புவனேஸ்வரி (கரவெட்டி) ஆறுதல் பரிசு, ஜி. மல்லிகாவதி (வவுனியா) ஆறுதல் பரிசு

**பெண்கள் உடை**

பி. ராஜேஸ்வரி (வவுனியா) 1,2,3 ஆம் இடம் மற்றும் ஆறுதல் பரிசு

**திரைச் சேலை**

பி. பிறேமினி (கோப்பாய்) 2 ஆம் இடம் , எஸ். மங்கலிகா (வவுனியா) 3 ஆம் இடம் .

**மேசை விரிப்பு**

எம். தயாநிதி (கரவெட்டி) 1 ஆம் இடம், எஸ். புவனேஸ்வரி (கரவெட்டி) 1 ஆம் இடம் , என். சுஜமாலதா (சங்கானை) 2 ஆம் இடம், கே. சிவசக்தி (வவுனியா) 3 ஆம் இடம், ரி. சசிகுமார் (உடுவில்) என். மஞ்சுதா (சங்கானை) ஆறுதல் பரிசு.

**ஏனைய சிறிய பொருட்கள்**

எஸ். ஜீவறூபி (சாவகச்சேரி) 2 ஆம் இடம் , ரி. ராஜேஸ்வரி (சாவகச்சேரி) 3 ஆம் இடம்.

(முற்றும்)

# அவுஸ்திரேலிய-இலங்கை மாணவர் கல்வி நிதியத்தின் உதவி கொடுப்பனவுகள்

அவுஸ்திரேலியாவில் உள்ள இலங்கை மாணவர் கல்வி நிதியம் யாழ்.மாவட்டத்தில் பாதிப்புக்குள்ளான மாணவர்களுக்கு கல்வி உதவிக் கொடுப்பனவுகளை வழங்கி வருகின்றது.

இதில் போர்க்காலச் சூழலில் தந்தையை இழந்த 83 மாணவர்களுக்கு சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலையம் மூலம் பிரதேச செயலக சிறுவர் மேம்பாட்டு அலுவலரின் உதவியுடன் ஒவ்வொரு பிரதேச செயலகங்களினூடாக வழங்கி வருகின்றது.

ஆடி, ஆவணி,புரட்டாதி மாதங்களுக்கான கொடுப்பனவுகள் வழங்கப்பட இருப்பதாகவும் பயன்பெறுவோருக்கு தனியான கடிதம் அனுப்பியுள்ளதாகவும் மற்றும் உரிய பிரதேச,செயலர்களுக்கு கடிதம் அனுப்பியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இக் கொடுப்பனவைப் பெறும் பிள்ளைகள் வரும்பொழுது கடைசித் தவணைப் பரீட்சை பெறுபேற்று (1ஆம் தவணைப் பரீட்சை), அறிக்கையின் போட்டோ பிரதி, பிள்ளை நன்கொடையாளருக்கு எழுதிய கடிதம், படம் தராத பிள்ளைகளின் புகைப்படம் ஆகியவற்றை எடுத்துவரல் வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ் உதவிகள் எதிர்வரும் 3ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு சாவகச்சேரி பிரதேச செயலர் காரியாலயத்திலும்,4ஆம் திகதி புதன்கிழமை காலை 10 மணிமுதல் 1 மணிவரை சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலையத்திலும்,5 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10 மணிக்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் அலுவலகத்திலும், 6 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு கரவெட்டி பிரதேச செயலர் அலுவலகத்திலும் பிற்பகல் 1 மணிக்கு பருத்தித்துறை பிரதேச செயலர் அலுவலகத்திலும் வழங்கப்படவுள்ளதாகவும் சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலையம் தெரிவித்துள்ளது.(ஓ-9)

## போட்டி முடிவுகள்

(சாவகச்சேரி)

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு சாவகச்சேரி பிரதேச சபையின் கச்சாய் பொதுநூலகத்தில் நடத்தப்பட்ட பொது அறிவுப் போட்டிகளில் வெற்றிபெற்ற முன்பள்ளி மாணவர்கள் மற்றும் தரம் 8 மாணவர்களின் விபரங்கள் வெளிவந்துள்ளன.

இதில்முதல் மூன்று இடங்களைப் பெற்று வெற்றி பெற்ற மாணவர்களின் பெயர் விபரம் வருமாறு,

**முன்பள்ளி மாணவர்கள்**

இ.திலக்சன்-கொடிகாமம் மத்தி, சி.டிலக்சனா -கொடிகாமம் ஞானசூரியன், ஜெ. கோபிகா-உசன்இராமநாதன்

**தரம் -8 மாணவர்கள்**

செ.சுமித்தா, த.தனுஷன், த.தர்சிகா-கொடிகாமம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை. (ஓ-4-29)

## ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசைத்தின போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசை தினத்தையொட்டிய பேச்சுப்போட்டி, கட்டுரைப் போட்டி எதிர்வரும் 2 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ளதாக தேர்வுச் செயலாளர் இரா.செல்வவடிவேல் அறிவித்துள்ளார். (சு)

## வடக்கு மாகாண ஆங்கில தினப் போட்டி

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண மட்ட ஆங்கில மொழித் தின போட்டிகள் இன்று சனிக்கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெறுகின்றது. இது தொடர்பில் வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா தெரிவிக்கையில்,

வடக்கு மாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான 2009 ஆம் ஆண்டுக்கான ஆங்கில மொழித்தினப் போட்டிகளில் (Oral Competition) இன்று கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெறுகின்றது.

இதில் யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார் மாவட்ட மாணவர்கள் கலந்துகொள்கின்றனர்.

அத்துடன் ஆங்கில மொழித்தின எழுத்துப் போட்டிகள் (Writing Competition) பின்னர் அறிவிக்கப்படும் என்றார். (சு-5)

## கல்விப் பணிப்பாளர்களுக்கான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கல்விப்பணிப்பாளர்களுடனான கலந்துரையாடல் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். வலயக் கல்வி அலுவலக முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறுமென வடக்கு மாகாணக் கல்விப்பணிப்பாளர் வீ. இராசையா அறிவித்துள்ளார்.

இக் கலந்துரையாடலில் சமகால நிலைமைகள் தொடர்பில் ஆராய்ந்து முடிபெடுக்கப்படுமென்பதால் யாழ். மாவட்டத்திலுள்ள ஐந்து வலயக் கல்விப் பணிப்பாளர்களையும் கணக்காளர்களையும் தவறாது சமூகம் தருமாறும் அலுவலர் கேட்டுள்ளார். (சு-5)

## கூட்டுறவு தின விழா

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியும் அங்கத்துவ சங்கங்களும் இணைந்து நடத்தும் ஸ்தாபகத் தலைவர் அமரர் சு நடேசு , மறைந்த பொது முகாமையாளர் அமரர் க .சந்திர்ராசா ஆகியோரின் நினைவு தினமும் , கூட்டுறவு தினவிழாவும், புலமைப்பரிசில் வழங்கலும் நிகழ்வு இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு வலிகாமம் கொத்தணி கலை யரங்க மண்டபத்தில் வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கங்களின் கொத்தணி தலைவர் க. மெய்யழகன் தலைமையில் நடைபெ றவுள்ளது.

இந்நிகவில் பிரதம விருந்தினராக சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா கலந்து சிறப்பிப்பதுடன், கௌரவ விருந்தினர்களாக யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ. சிவலிங்கம் , மானிப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சந்திர ஜெயவீர , ஈழமக்கள் ஜனநாயகக்கட்சியின் தேசிய அமைப்பாளர் ஜீவரத்தினம் , வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் த. சிவலிங்கம் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

மேலும் சிறப்பு விருந்தினர்களாக கலால் பொறுப்பதிகாரி ந. கிருபாகரன், மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர் இ.பாலச்சந்திரன், யாழ். மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்க சமாசத்தின் பொது முகாமையாளர் ஜே.பி குணரத்தினம், கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர் பா.சிவபாலன் , ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் வலி மேற்கு பிரதேச அமைப்பாளர் எஸ். மகேந்திரன் (வள்ளுவன்) ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (6-4)

கழகம் – இலங்கை
கைகள் வணிக பீடம்
பார முகாமைத்துவமாணி
t (BBM) Online Degree Programme
றிப்பு மலர் – 2009

Ministry of Higher Education

National Online Distance Education Service

## முகாமைத்துவ பேராசிரியரின் வாழ்த்துச் செய்தி



ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதி உதவி வழங்கப்பட்டு ஆரம்பிக்கப்பட்ட தொலைக் கல்வி நவீன மயப்படுத்தல் திட்டம் (DEMP) இலங்கையில் 6 பல்கலைக் கழகங்களும், 34 பங்குபற்றும் நிறுவனங்களும் இணைந்து 42 டிப்ளோமா/ பட்டச்சான்றிதழ் கற்கை நெறிகளை இலங்கை முழுவதும் இணையவழிக் கல்வி மூலம் வழங்கி வரு கின்றன. இத்துடன் இணைந்ததாக யாழ்.பல்கலைக்கழகம் தமிழ் மொழி மூலம் முதன் முதலாக மூன்று வருட வியாபார முகாமைத்துவ கற்கைநெறியினை சம்பிரதாயபூர்வமாக இன்று ஆரம்பித்து வைப்பதையிட்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன். பல்கலைக்கழகங்களுக்கு புக முடியாதவர்கள், தொழில்புரிவோர், மிகவும் தொலைக் கிராமங்களில் வாழ்பவர்கள், வெளிநாட்டவர்கள் யாவரும் இக் கற்கைநெறியினை தம்முடைய சொந்த இடங்களிலிருந்து கற்றுக்கொள்ள முடியும். இன்றைய தகவல் தொழில்நுட்ப காலத்தில் எல்லோருக்கும் கல்வி வசதி என்ற 'தூரநோக்கில்' சகல மக்களுக்கும் கல்வி கற்பதற்கான வசதியினை யாழ்.பல்கலைக்கழகம் முதன் முதலில் ஆரம்பிப்பது பாராட்டுக்குரியதொன்றாகும்.

இக் கல்வி முறையானது எந்தளவுக்கு மரபுரீதியான கல்வி முறையில் இருந்து வேறுபடுகின்றது என்பதனை அதனுடைய தரம், நோக்கங்களை அடைதல், கிடைக்கப்பெறுகின்ற அறிவின் அளவு என்பனவற்றினைப் பயன்படுத்தி இனங்காண முடியும். இணையவழி கற்கைநெறி மூலம் பல நன்மைகளை கல்வி கற்பவர்கள் பெறும் வாய்ப்புக்கள் உள்ளன. மாணவர்கள் மையப்படுத்திய கற்கை முறைமை, எழுதுவதற்கானமுனைப்பு, அதிகளவுக்கு மாணவர்களுக்கிடையே கருத்துப்பரிமாற்றத்திற்கான வசதி, வாழ்நாள் முழுவதும் தரமான பாட விதானக் குறிப்புக்கள், கற்றலில் நெகிழும் தன்மைகள் யாவும் கல்வியில் ஈடுபடுபவர்களுக்கு உதவியாக அமைகின்றன. நவீன உலகில் மிகவும் போட்டிச்சூழலில் முன்னேற வாய்ப்பின்றி முயலும் மக்களுக்கு கல்வியில் முன்னேறஇது ஒரு பிரசாதமாக அமையும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. இத்தகைய சிறப்பு மிக்க கற்கைநெறி சிறப்பாக ...சி பெற எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பேராசிரியர்.மா.நடராஜசுந்தரம்
முகாமைத்துவக்கற்கைகள் துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

## வணிகத்துறைத் தலைவரின் வாழ்த்துச் செய்தி



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடத்தால் ஆரம்பிக்கப்படவுள்ள வியாபார, முகாமைத்துவமாணி இணையவழிக் கற்கை நெறியின் (Online Degree Programme) ஆரம்பநிகழ்வையொட்டி வெளிவரும் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் அக் கற்கைநெறியின் முதலாவது இணைப்பாளர் என்ற வகையிலும், வணிகத்துறைத் தலைவர் என்ற முறையிலும் மட்டற்ற மகிழ்சியடைகிறேன்.

தமிழ் மாணவர்கள் அசாதாரண சூழ்நிலையிலும் தமது விடாமுயற்சியுடன் கல்வி கற்று திறமைச் சித்திகளைப் பெற்றிருந்தும் அவர்களில் பலர் பல்கலைக்கழக அனுமதிக்கான வாய்ப்பை நீண்டகாலமாக இழந்து வந்துள்ளனர். அத்தகைய மாணவர்களின் எதிர்கால நன்மை கருதி வணிகம், கலை, விஞ்ஞானம், கணிதம் ஆகிய துறைசார்ந்த மாணவர்களுக்கு இணையத்தள வழிக் கற்கைநெறியை அறிமுகப்படுத்தி அவர்களையும் பல்கலைக்கழகத்துடன் இணைத்துக்கொள்ள வேண்டும் என்பது எமதுதுறையின் நீண்டகாலக் கனவாக இருந்து வந்தது. இந்நிலையில் சில ஆண்டுகளுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட இக் கல்வித் திட்டம் இன்று பலரது நீண்டகால உழைப்பின் பயனாக நி... பெறுவது பல்கலைக்கழக அனுமதிக்கான வாய்ப்பை இழந்து தவிக்கும் மாணவர்களுக்கும் அவர்களின் பெற்றோருக்கும் மகிழ்ச்சியைத் தரும் பொன்னாளாக இந்நாள் அமையும் என்பதில் ஐயமில்லை.

அதேநேரத்தில் எமது பல்கலைக்கழகத்தில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது இணையத்தள வழிக் கற்கைநெறிக் கல்வி என்ற வகையிலும் தமிழில் தொடங்கப்பட்ட முதலாவது கற்கை நெறியென்ற முறையிலும் இந்நிகழ்வு எமது பீடத்திற்கும் பெருமைதரும் நன்னாளாக இருக்கும் என்பதிலும் ஐயமில்லை. எதிர்காலத்தில் இதுபோன்ற கற்கை நெறிகள் ஏனைய பாடங்களிலும் ஏனைய துறைகளிலும் தொடங்குவதற்கு இந்நிகழ்வு ஒரு தொடக்கப்புள்ளியாக அமைய வேண்டும் என்பதே எனது விருப்பமாகும்.

இன்றைய நிகழ்வையிட்டு நாம் பெருமை கொள்ளும் இச்சந்தர்ப்பத்தில் இணையத்தள வழிக்கல்வியை நவீனமயப்படுத்தப்படும் இலங்கை அரசாங்கத் திட்டத்தின் கீழ் ஆரம்ப நிதியுதவியைப் பெற்று இக் கல்வித் திட்டத்தை எமது துறையில் நாம் ஆரம்பிப்பதற்கான செயற்திட்டத்தை தயாரிப்பதிலும் இக் கற்கைநெறிக்கான பாடவிதானங்களை வடிவமைப்பதிலும் என்னுடன் ஒன்றிணைந்து அயராது உழைத்த அனைத்துவணிகத்துறை விரிவுரையாளர் களையும் குறிப்பாக திரு.க.சிவராஜா அவர்களையும் இச் சந்தர்ப்பத்தில் நன்றியுடன் நினைவுபடுத்திக்கொள் வதில் நான் மனநிறைவடைகிறேன்.

இன்று எமது இணையத்தள வழிக் கல்வித் திட்டத்தில் இணைந்து தமது கல்வியைத் தொடரவுள்ள முதலாவது அணி மாணவர்களும் எதிர்வரும் காலங்களில் இணைந்து இக்கல்வியைத் தொடரவுள்ள மாணவர்களும் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கவேண்டும் என்ற அவர்களது நீண்டகாலக் கனவு நனவாகி அவர்களின் எதிர்காலம் சிறப்புற அமைய என்றும் இறைவனின் நல்லாசிகள் கிட்டும் என்ற நம்பிக்கையுடன் அவர்களையும் வாழ்த்தி விடைபெறுகின்றேன்.

கே.கே.அருள்வேல்
தலைவர்
வணிகத்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## முகாமைத்துவத்துறைத் தலைவியின் வாழ்த்துச்செய்தி



யாழ்ப்பாண பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடமானது இன்று வியாபார முகாமைத்துவமாணி எனும் கற்கை நெறியினை ஆரம்பித்து வைக்கப்படுவதையிட்டு பெரும் மகிழ்ச்சியடைகின்றேன். இப்பீடமானது வியாபார நிர்வாக மாணி, வர்த்தகமாணி எனும் இரு கற்கை நெறிகளை உள்வாரியாக வழங்குவதுடன் எல்லோருக்கும் கல்வி என்ற வகையில் வெளிவாரியாக வர்த்தகமாணியையும் வியாபார முகாமைத்துவ மாணியையும் வழங்குவதனையிட்டு பெரு மகிழ்வடைகின்றேன். மனித வாழ்வை மேல்நிலையடையச் செய்வது கல்வியே எனும் முதுமொழிக்கிணங்க வேலைத்தலத்திலுள்ளோர் பல்கலைக்கழகத்திற்கு உள்வாங்கப்படாதவர்கள் பல்வேறு சூழ்நிலைகாரணமாக இங்கு இல்லாமல் வெளிநாடு சென்றவர்கள் இன்னும் கல்வியில் முன்னேற ஆர்வம் உள்ளவர்கள் என எல்லோருக்கும் இக்கல்வியை வழங்குவதனையிட்டு பெருமகிழ்வடைகின்றேன். மிகவும் விரைவாக ஓடிக்கொண்டிருக்கும் இக்கால கட்டத்தில் வீட்டில் இருந்தபடியே இணைய வழியூடாக கல்வி கற்கின்ற இக்கல்விப்பாரம்பரியத்தை மேலெடுத்துச் செல்வதற்கு முன்னிற்கின்ற பீடாதிபதி தலைவர்கள், இணைப்பாளர்கள், விரிவுரையாளர்கள், கணனிப் பிரயோக உதவியாளர்கள் அனைவரையும் வாழ்த்துகின்றேன். யாழ் பல்கலைக்கழக முகாமைத்துவ பீடமானது இன்று போல் என்றும் கல்வியிலும் ஏனைய பல செயல்களிலும் பல வளர்சிகளைக் கண்டு பல சிறப்புக்களையும் பெற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றேன்.

திருமதி தேவரஞ்சினி சிவாஸ்கரன்
தலைவி/ முகாமைத்துவத்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

## பீடாதிபதியின் வாழ்த்துச் செய்தி



முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடமானது தனது நீணடகால எதிர்பார்ப்பான வியாபார முகாமைத்துவமாணி பட்டப்படிப்பை இன்று இணையவழி மூலமாக ஆரம்பித்து வைப்பதையிட்டு நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். 2006 ஆண்டு முன்னெடுக்கப்பட்ட இந்த இணையவழிக் கல்வி நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலை காரணமாக நீண்ட நாட்களின் பின்னர் இன்று நடைமுறைக்கு வருவதையிட்டு இறைவனுக்கு நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளேன். பேராசிரியர் மோகனதாஸ் அவர்கள் துணைவேந்தராக இருந்த காலத்தில் முன்னெடுக்கப்பட்ட இந்த இணையவழிக் கல்வி பின்னர் பேராசிரியர் குமாரவடிவேல் பதில் துணைவேந்தராக இருந்த காலத்தில் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டபோதும் யுத்த சூழ்நிலைகளால் இதனை நடைமுறைக்கு கொண்டுவர முடியவில்லை. இன்று பேராசிரியர் சண்முகலிங்கம் அவர்கள் துணைவேந்தராக இருக்கும் காலத்தில் இந்த இணையவழிக் கல்வி அறிமுகப்படுத்தப்படுவதையிட்டு நான் பெருமைய டைகின் றேன்.

தமிழில் முதன்முறையாக இலங்கையில் மட்டுமன்றி உலகத்திலேயே அறிமுகப்படுத்தப்படும் கற்கை நெறியாக BBM இணையவழிக்கல்வி காணப்படுகின்றது. இலங்கையில் மட்டுமன்றி உலகத்தில் பரந்துவாழும் புலம் பெயர் தமிழர்களும் கூட தமது தாய் மொழியில் கல்விகற்று பட்டத்தினைப் பெற்றுக்கொள்ள இக்கற்கைநெறி வகைசெய்யும். தொழில் புரிவோர் பாடசாலைக் கல்வியைப் பூர்த்தி செய்தோர் குறிப்பாக நேரடியாக விரிவுரைகளுக்கு சமூகமளிக்க முடியாதோர் தமது ஓய்வு நேரத்தில் இணையவழி மூலமாக இக்கற்கை நெறியை மேற்கொள்ளும் வாய்ப்பு கிடைத்திருப்பது ஒரு வரப்பிரசாதமென்றே கூறுதல் வேண்டும்.

BBM இணையவழிக் கல்வியை எமது பல்கலைக்கழகத்தில் அறிமுகப்படுத்த எமக்கு உதவிய பலருக்கு நான் நன்றிகூறக் கடமைப்பட்டிருக்கிறேன். எமது துணைவேந்தர் பேராசிரியர் சண்முகலிங்கம் அவர்களும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு உறுப்பினர் பேராசிரியர் சிற்றம்பலம் அவர்களும் இதற்கான அனுமதியைப் பெற்றுத்தருவதில் காட்டிய அக்கறை பாராட்டுக்குரியதாகும். அதேபோல் இதனை முன்னெடுப்பதற்கு முன்னாள்இணைப்பாளர் திரு. அருள்வேல் அவர் களும் வெளிவாரி பட்டப்படிப்பு அலகின் இணைப்பாளர் திரு.சிவராஜா அவர்களும் புதிய நிகழ்ச்சித் திட்ட இணைப்பாளர் திருமதி . யோகேந்திரராஜா அவர்களும் எடுத்துக்கொண்ட அக்கறையினையும் பெருமையுடன் பாராட்டக்கடமைப்பட்டுள்ளேன்.

அத்துடன் முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீட விரிவுரையாளர்கள், துறைத்தலைவர்கள் உதவிப் பதிவாளர், கல்விசாரா உத்தியோகத்தர்கள் எல்லோருக்கும் எனது பாராட்டுக்களையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கின்றேன். இதே போல் காலத்தின் தேவை கருதி இணையவழிக் கல்வியை வெளிவாரியாக அறிமுகப்படுத்த உதவிய வெளிவாரிப்பட்டப்படிப்புகள் அலகின் உத்தியோகத்தர்களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகட்டும்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் (ADB) நிதியுதவியுடன் உயர்கல்வி அமைச்சினால் அறிமுகப்படுத்தப்பட்ட தொலைக்கல்வி நவீனமயமாக்கல் திட்டத் (DEMP) தின் கீழ் BBM இணையவழிக் கல்வி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதற்குரிய பயிற்சிகளும் ஆலோசனைகளும் DEMP அமைப்பினூடாகவே வழங்கப்பட்டு வருகின்றது. இத்தகைய இணையவழிக் கல்வியைப் பெரும் எண்ணிக்கையிலான மாணவர்கள் கற்கப் போட்டியிடுவதை காணமுடிந்தாலும் ஆண்டுதோறும் இதில் 100 பேரை மட்டுமே எம்மால் இணைத்துக்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்பதையும் அறியத்தருகின்றோம். இவர்களுக்கு தரமான கல்வியை வழங்கி அவர்களை எதிர்காலத்தில் நல்ல பட்டதாரிகளாகவும் பயனுள்ள நாட்டுப் பிரஜைகளாகவும் மாற்றுவதே எமது பிரதான இலக்கு என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருவதுடன் இக்கற்கை நெறிக்கான வாழ்த்தையும் தெரிவித்துக்கொள்ளவிரும்புகின்றேன்.

க. தேவராஜா
பீடாதிபதி
முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடம்,
யாழ். பல்கலைக்கழகம்.

## வெளிவாரி அலகு இணைப்பாளரின் வாழ்த்துச் செய்தி



சமகால தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியின் பயன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தொலைக்கல்வி அலகின் இணையத்தள வழி மாண வர்களுக்கும் கிடைக்கப்பெற வேண்டும் என்ற நோக்குடன் இணையவழி மூலமான தொழில் வியாபார முகாமைத்துவமாணி கற்கைநெறி இன்று அறிமுகம் செய்யப்படுகின்றது. 1991 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 22 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட வெளிவாரிப் பரீட்சைகள் அலகினூடாக யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடத்தின் சிறப்புக்கலைத் தேர்வு, இசைமாணி சிறப்புத் தேர்வு, நடனமாணி சிறப்புத் தேர்வு, பொதுக்கலைத் தேர்வு கற்கை நெறிகளும் முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடத்தினால் வணிகமாணி சிறப்புத் தேர்வு கற்கைநெறியும் பாரம்பரிய வழிமுறையீடு வழங்கப்படுகின்றன. இவ் ஐந்து கற்கைநெறிகளுக்கு மேலாக இணையத்தள வழிமூலமான முறையில் முகாமைத்துவமாணி கற்கைநெறி இன்று வெளிவாரிக் கற்கை நெறிகளில் மேலும் ஒன்றாக அறிமுகமாகின்றது.

பல்கலைக்கழக வாய்ப்புக்களைப் பெறத் தவறியவர்கள் தமது பட்டப்படிப்பினை இணையத்தள வழிமூலம் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பை இக் கற்கைநெறியூடாக வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள் அலகு ஏற்படுத்தியுள்ளது.

பாரம்பரிய வழிமுறைக் கற்கை நெறிகளோடு இணையவழித் தொலைக்கல்வி முறையை இலங்கையின் உயர் கல்வி நிறுவனங்களில் அறிமுகமாக்கும் நிகழ்ச்சித் திட்டம் உயர் கல்வி அமைச்சினால் ஆசிய அபிவிருத்தி வங்கியின் அனுசரணையோடு மேற்கொள்ளப்பட்டது. அதன் பேறாக தொலைக்கல்வி நவீனமயப்படுத்தல் திட்டம் 2006 ஆம் ஆண்டில் (Distance Education Modernization Project -DEMP) முன்னெடுக்கப்பட்டது. அந்நிகழ்ச்சித் திட்டப் பங்காளிகளில் ஒன்றாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமும்இணைந்து கொண் டது. அதன் வழிமேற்கொள்ளப்பட்ட தொடர் செயற்பாடுகளின் பேறாக இணையவழி மூலமான தொழில் முகாமைத்துவமாணி வெளிவாரிக் கற்கைநெறி தொடக்க நிகழ்வு கைகூடியுள்ளது. இக் கற்கை நெறிவழி வெளிவாரி மாணவர்கள் நிறைவான பயனுற வேண்டுமென வாழ்த்துவதில் மகிழ்வுறுகிறேன்.

கந்தையா சிவராஜா
இணைப்பாளர்,
வெளிவாரிப்பதிவுகள் பரீட்சைகள் அலகு,
(தொலைக்கல்வி அலகு)22
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

(C/3623)

# உலகுக்கு உணவளித்த உத்தமர்

## நோர்மன் போர்லாக்

1944களில் விளைநிலங்களில் ஓடித்திரிந்த போர்லாக் அவர்கள் விவசாயியைப் போல உழுதல், களைகளை அகற்றுதல் என அனைத்து தொழில்களையும் தாமாகவே ஒருநாளில் 12 மணித்தியாலங்களை முழுவதுமாக விளைநிலத்தில் செலவழித்த மனிதன் எனக் கூறுவார்கள். ஒரு சிறுவனாக அமெரிக்காவின் ஐயோவா எனுமிடத்திலுள்ள நோர்வே நாட்டினது பண்ணையில் இருந்த போது வறுமையுடன் மல் லுக்கட்டிய மக்களை பிச்சை கேட்டு வந்த மனிதர்களை கண்ட இவருக்கு அந்த நேரத்துக்கான பிச்சை போடும் எண்ணம் விதிக்கவில்லை.

மாறாக இந்தப் பிச்சை கேட்கும் நிலையை முழுவதுமாக மாற்றவே சிந்தித்தார், செயற்பட்டார், கண்டுபிடித்தார். வெறும் வயிறிருக்க அதிலெப்படி உலக சாந்தி சமாதா னம் வரும். உண்ண உணவு செய்தார். புரட்சிகரமான சிந்தனையும் செயலுமல்லவா இது. உலகினது குறிப்பிட்ட எண்ணிக்கையான மக்களது வெறும் வயிற்றுக்கு ஒருவேளை உணவு கொடுத்த கைங்கரி யம் இதுவன்றோ.

இவ்வளவு சிரமப் பட்ட இம்மாமனித னது உயிர் கடந்த செப்டெம்பர் 15 ஆம் திகதி சிரமப் பட்டே இவரது உடலிலிருந்து பிரிந்து சென்று விட்டது. இத்துடன் இவரது கதை முடிந்து விடவில்லை. பல ஆயிரம் மாணவர்களை உரு வாக்கி விட்டு அவர்களை சிந்திக்கவும் வைத் திருக்கின்ற பெருமையை உலகம் என்றும் நினைவில் வைத்துக் கொள்ளும். கண்டுபிடிப்புக்கள் இலகுவானவையல்ல. பல ஆண்டுகளாக இதற்காக செயற்படவும் வேண்டும். 1930களில் அமெரிக்காவில் முதன்மைப் பயிராக பயிரிடப்பட்ட கோதுமையில் தாக்கத்தை ஏற்படுத்திய துரு (Rust) நோயினால் வீட்டுக்கு வர வேண்டிய விளைச்சலும் வராது போனது. இதனால் துரு நோயிற்கான காரணியான பங்கசு விருத்தி யாகும் விதம், விரைந்து பரவும் தன்மை, கோதுமையில் நோய்த் தாக்கத்தை ஏற்படுத் தும் வலிமை என்பவற்றை கண்டறிந்து ஜப் பானிய நோறின் (Norin) என்னும் குட்டையின (Dwart) கோதுமையை அமெரிக்க கோதுமை இனத்துடன் கலப்பினப்பாக்கம் செய்து பெற்ற குறுகிய கால, நேராக வளரும், கடினமான தன்மையுடைய திருந்திய கோதுமை இனம் இந்த உணவுற்பத்தியில் புரட்சிகர சாதனையை செய்து காட்ட உதவியது.

இதுவே இந்தியாவில் 1965 களிலிருந்த 12 மெற்றிக்தொன் என்ற உற்பத்தி புள்ளியை 1970 களில் 20 மெற்றிக்தொன் ஆக மாற்றிக் காட்டியது. 1968 இல் பாகிஸ்தானில் கோதுமையில் தன்னிறைவைக் கொண்டு வந்தது.

உலக சனத்தொகைப் பெருக்கம் இந்த வேகத்தில் செல்லுமாயின் 2050 ஆண்டளவில் உணவு உற்பத்தி தற்போது உள்ளதை விட இரண்டு மடங்கால் அதிகரிக்க வேண்டும் என 2005 ஆம் ஆண்டிலேயே அனுமானி த்து எழுதிவைத்திருக்கிறார். இவரது முழு முயற்சியினால் இன்று 245 மில்லியனிலி ருந்து ஒரு பில்லியன் மக்கள் உணவு பெற்று உயிர்வாழ முடிகிறது.

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 9-XIX

இனிவரும் உலகத்திற்கு பரம்பரையலகு புரட்சியே (Generavolution) உணவு கொடுக்க தயாராகின்றது. உயிரியல் தொழில்நுட்பம் இதனை செய்து காட்டும் என அனைவரும் நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள். இதற்கு முன்னுதாரணமாக விற்றமின் A யினை அதிக செறிவுள்ளதாக்கும் *பொன் நெல்* இனது அறிமுகத்தை இங்கே குறிப்பிடலாம்.

ஆனாலும் சூழலியலாளர்கள், பசுமை யில் சமாதானம் என்னும் நிறுவனத்தினர் (Green peace) மற்றும் மதக்கொள்கையில் ஊறியவர்களின் எதிர்ப்பையும் தாண்டி இந் நிகழ்வுகள் இடம்பெற வேண்டும். பரம்பரை யலகு மாற்றம் பெற்ற பயிர்கள் (Genefically Moditied Crops - Gmcrops) இவர்களின் எதிர்ப்புக்கு நடுவே செய்து காட்டும் செயலாக இது அமையும்.

ஒரு நூற்றாண்டு காலமாக போர்லாக் விஞ்ஞானியாக பரிணமித்த காலத்தில் உணவுற்பத்திக்கான அடித்தளத்தை வலுவாக அமைத்ததும் மனிதருள் மாணிக்கமாக அடிமட்ட மக்களை நேசித்ததும் அவர்களுக் கான உணவுற்ப்த்தியை மையப்படுத்தியே அவருடைய உடல், பொருள், ஆவி என அனைத்தும் இயங்கியதும் என்றும் மங்காத குன்றிமணி போல இவ் வையகத்தினர் மத்தியில் வாழ்ந்து கொண்டிருப்பார்.

இத்தொடரை வாசிப்பவர்களுக்கு அடுத்தது என்ன? என்ற வினா எழும். ஒருபக்கத் தில் பசுமைப்புரட்சியினால் உணவுற்பத்தி செய்ய வழி பிறந்தது வரப்பிரசாதம் என்றா லும் அதனை சரிவர பயன்படுத்தாததினால் வந்த சூழலில் ஏற்பட்ட ஆபத்துக்களையும் வேளாண்மையில் பயன்படுத்த வேண்டிய உத்திகளையும் இனி வருங்காலங்களில் இணைத்துப் பார்ப்போம்.

பசுமைப் புரட்சியி லிருந்து பரம்பரையல குப் புரட்சியென உயிரியல் தொழில்நுட்பத்தின் கரங்கள் வலுப்பெறும் வழியை அலசிப் பார்ப்போம். பீடை நாசினிகளின் பயன்பாடு பற்றியும் அவற்றினது உற்பத்தி பற்றியும் அலசி ஆராய்ந்து வந்த வேளையில் திடீரென பசுமைப்புரட்சி தந்தை நோர்மன் போர்லாக் அவர்களது மறைவு அவர் பற்றிய விவரண மொன்றை எழுத வைத்து விட்டது.

இனி வருங்காலத்தில் பீடை நாசினிக ளின்



கலாநிதி கு.மிகுந்தன்
தலைவர்
உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

முழுவிபரத்துடனும் உங்களை சந்திக்கின்றேன். பாடசாலை மாணவர்கள், ஆசிரி யர்கள், விவசாயிகள், பல்கலை மாணவர்கள், வைத்தியர்கள் மற்றும் ஏனைய பொது மக்கள் என பலரும் இத்தொடரை வாசிப்பதனால் விஞ்ஞானத்தை விவசாயத்தில் பயன்படுத்திய விதத்தை இலகு தமிழ்மொழியில் சுவையாக தொடர்ந்து தரவிருக்கிறேன். இது பற்றிய உங்களது கருத்துக்களை என்றும் வரவேற்கிறேன். (தொடரும்)

# யாழ் மாவட்டத்தில் உழுந்துச் செய்கை

**வர்க்கமும் விதை அளவும்**

உழுந்தில் செடி வர்க்கம் கொடி வர்க்கம் என இரு வர்க்கம் உண்டு. எம்.ஜ-1 எனப்படும் செடி உழுந்து வர்க்கம் விதைப்பதற்குப் பொருத்தமானது.

**விதைப்பரிகரணம்**

முளைத்து 2 இலைப்பருவத்தில் போஞ்சி ஈ தாக்கும். காபோசல்பான் தூளை 10 கிராம் 1கிலோ விதைக்கு இட்டு நன்கு கலந்து விதைத்தால் இதன் தாக்கத்தை தவிர்க்கமுடியும்.

**நடுகையும் நடுகை இடைவெளியும்**

3 கி.கிராம் உழுந்து விதை 4 பரப்பு விஸ்தீரணத்தில் விதைப்பதற்கு தேவையாகும். விதைகளை வீசி விதைப்பு மூலமும் வரிசைகளில் இடுவதன் மூலமும் பயிரிடமுடியும். வீசி விதைப்பதாயின் செய்கை மேற்கொள்ளும் நிலத்தை சம பங்காகப் பிரித்து விதையையும் நிலத்திற்கு ஏற்ப சம பங்காகப் பிரித்து விதைப்பதன் மூலம் சீரான பயிரடர்த்தியை பேண முடியும்.

வீசி விதைக்கும் போது பெரும்பாத்திகள் அமைத்து விதைப்பதன் மூலம் மழை நீரை சேமிப்பதோடு நீர்ப்பாசனம் செய்வதும் இலகுவாக இருக்கும். வரிசையில் விதைப்பதாயின் வரிசைகளுக்கிடையே 1 அடியும் வரிசையில் 3-4 அங்குலம் இடைவெளியும் இருத்தல் வேண்டும். 5 நாட்களின் பின் முளைக்காத இடங்களிற்கு விதையிடல் வேண்டும். 10 நாட்களின் பின் 3 அல்லது 4 அங்குல இடைவெளியில் ஒரு பயிர் இருக்கத் தக்கவாறு ஐதாக்க வேண்டும். வரிசையில் பயிரிட்டால் களை கட்டுப்படுத்தல் நீர்ப்பாசனம் என்பவற்றை இலகுவாக மேற்கொள்ள முடியும்.

**பசளைப்பிரயோகம்**

நுண்ணுயிர்க் கரைசல் பாவித்து தயாரிக்கப்பட்ட கூட்டெருவை நிலத்திற்கு இட்டு உழுவதின் மூலம் நீர் பிடித்து வைத்திருக்கும் இயல்ப மேம்படுகின்றது. போசணைப் பதார்த்தங்களைப் பயிர் இலகுவில் எடுக்கக்கூடியதாகவும் இருக்கும்.

பயிரின் வேர் விருத்தி, திடகாத்திரமான வளர்ச்சி ஆகியவற்றுக்கு அடிக்கட்டுப்பசளையும் பூத்தலைத் தூண்டவும், கூடிய விளைவைப் பெறவும் மேற்கட்டுப்பசளையும் இட வேண்டும்.

**1000 கன்று தரைக்குத் தேவையான பசளை அளவு**

| பசளை | யூரியா | ரிஎஸ்பி. | எம்.ஒ.பி |
|---|---|---|---|
| அடிக்கட்டுப்பசளை | 3.5 | 10 | 7.5 |
| மேற்கட்டுப்பசளை | 3.5 | -- | -- |

**நீர்ப்பாசனம்**

காலபோகத்தில் மழை நீர் வடிந்தோடக் கூடியவாறு சரிவுக்கு குறுக்காக வடிகால்களை அமைக்க வேண்டும்.

**களை முகாமைத்துவம்**

களைகளை பயிர் வளர்ச்சியைத் தடை செய்யும். இதனால் விளைவு குறையும். விதைத்து மூன்றாம் கிழமை பயிர்களிடையே காணப்படும் களைகளைப் பிடுங்கி அகற்ற வேண்டும். வரிசையில் விதைப்பு எனில் 3 ஆம் வாரம் மண்வெட்டியால் செதுக்கி களைகளை அழித்து விடலாம்.

**பூச்சி, நோய், முகாமைத்துவம்**

உழுந்து பயிர்ச் செய்கையில் பூச்சி, புழுத் தாக்கம் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது. போஞ்சி ஈ, காய்துறைபுழு ஆகியன உழுந்தில் தாக்கும் முக்கிய பீடைகளாகும்.

**போஞ்சி ஈ**

போஞ்சி ஈ விதை முளைத்து நாற்று வெளிவந்து 5-7 நாட்களில் தாக்கத்தை ஏற்படுத்தும். இலைகளில் போஞ்சி ஈ, சூலிடைப்படுத்தியதால் குத்திய அடையாளங்கள் வெண் புள்ளிகள் போன்று காணப்படுவதை அவதானிக்கலாம்.

**காய் துளைப்பான்**

கபிலப்பச்சை நிற அல்லது பச்சை நிறமான குடம்பிகள் பூக்கள், காய்களை சேதம் செய்வதை அவதானிக்கலாம். இவற்றின் தாக்கத்தால் பூக்கள், காய்கள் குறையும். காய்கள் சேதப்படுத்துவதால் விளைவு குறையும். குடம்பிகளைப் பூத்தல், காய்த்தல் காலத்தில் பொறுக்கி அழிக்க முடியும்.

| பூச்சிப்பீடை | பூச்சி நாசினி | அளவு |
|---|---|---|
| போஞ்சி ஈ | காபோசல்பான்(மாசல்)<br>போமோதியோன்(அந்தியோ) | 30மி.லீ/10லீற்றர் நீரில்<br>30மி.லீ/10லீற்றர் நீரில் |
| காய்துளைப்பான் | நவலுறோன்(றிமோன்)<br>எற்றோபென்புரிறாக்ஸ் (றிபோன்) | 10மி.லீ/10லீற்றர் நீரில்<br>15மி.லீ/10லீற்றர் நீரில் |
| | குளோர்புளுசறோன் (அற்றப்புறோன்) | 13மி.லீ/10லீற்றர் நீரில் |

**நோய்கள்**

**தூள் பூஞ்சண நோய்**

இலைகளின் மேல் வெண் பூஞ்சணங்கள் தொட்டமாகக் காணப்படும். இலைகளின் மேற்பரப்பில் சாம்பல் தூவியது போன்று காணப்படும். இதனால் ஒளித்தொகுப்பு குறைவடைந்து விளைவு குறையும்.

**துருநோய்**

இலைகளில் செங்கபில நிறத்தட்டுக்கள் கறள் போன்று காணப்படும். தாக்கம் கூடும் போது இலைகள் உதிரும்.

| நோய்கள் | பூஞ்சண நாசினி | அளவு |
|---|---|---|
| தூள் பூஞ்சணம் | காபெண்டசிம் (பவஸ்ரின்) | 7 கிராம் 10லீற்றர் |
| துரு | சல்பர் 80% ந.துர்ள் | 50 கிராம் 10லீற்றர் |

**அறுவடை**

காய்கள் முதிர்ச்சியடையும் போது கறுப்பாக மாறும். இலைகள் மஞ்சள் நிறமடையும். பின்னர் உலர்ந்து உதிரும். செடி கள் காய்ந்து போனாலும் உழுந்தின் காய்கள் வெடிப்பதில்லை. ஒரே தடவையில் பிடுங்கி காய வைத்து அடித்து விதைகளை வேறாக்கலாம். படங்கில் பரவி நன்கு காய விட்டு உழவு இயந்திரம் மூலம் அல்லது தடிகளால் அடித்து விதைகளை வேறாக்கலாம்.

**சேமித்தல்**

விதைகளைப் 10% ஈரப்பதனில் சேமிக்க வேண்டும். அவரை வண்டுகள் சேமிப்பில் விதைகளைத் தாக்கும். விதைகளைக் காய வைத்து துளசி இலை, வேப்பமிலை இட்டு காற்றுப் புகாத கொள்கலன்களில் சேமிப்பதாலும் வாரம் ஒரு முறை காயவைத்து சேமிப்பதாலும் தாக்கத்தை குறைக்க முடியும்.

5 மில்லி லீற்றர் தாவர எண்ணெயினை ஒரு கிலோ விதைக்கு இட்டு நன்கு விதையில் படும்படி கலந்து சேமிப்பதன் மூலமும் வண்டுகளின் தாக்கத்தைக் குறைக்க முடியும். வீட்டுத் தேவைக்கு உழுந்தைச் சேமித்து வைப்பதாயின் விதைகளை பாதியாக உடைத்து சேமிக்கலாம். இவ்வாறு சேமிக்கும் போது உடைத்த விதைகளில் உள்ள உணவு அவ ரை வண்டுகளின் உணவிற்கும் இன விருத்திக்கும் போதாது.

**விளைவு**

குறைந்த உற்பத்திச் செலவுடன் உழுந்துப் பயிர்ச் செய்கையை மேற்கொள்ள முடியும். ஒரு ஏக்கரில் உழுந்தினைப் பயிர் செய்வதற்கு ரூபா 47,654/- செலவாகும். தற்போது ஒரு கிலோ உழுந்து ரூபா 150/- ஆக கடைகளில் விற்பனை செய்யப்படுகின்றது.

ஒரு ஏக்கரில் இருந்து சராசரியாக 600 கிலோ உழுந்தை விளைவாகப் பெற முடியும். இதன் மூலம் கிடைக்கும் வருமானம் ரூபா 90,000/- ஆகும். இதிலிருந்து நிகர இலாபமாக ரூபா 42,346/- ஐப் பெற்றுக் கொள்ளலாம்.

கிடைக்கும் மழை நீரைப் பயன்படுத்தி குறைந்த செலவுடன் கூடிய இலாபத்தினை உழுந்துப் பயிர்ச் செய்கையிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். (முற்றும்)

க. தனபாலசிங்கம்
(பாடவிதான உத்தியோகத்தர்)
பிரதி விவசாயப் பணிப்பாளர் (விரி) அலுவலகம்
யாழ்ப்பாணம்.

பரமசிவன் கழுத்திலிருந்து பாம்பு கேட்டது
கருடா சௌக்கியமா? யாரும் இருக்குமிடத்தில்
இருந்து கொண்டால் எல்லாம் சௌக்கியமே
கருடன் சொன்னது; அதில் அர்த்தமுள்ளது.

*- கவிஞர் கண்ணதாசன்*

வலம்புரி

# பழைய முற்றவெளிப் பேச்சில் ஜெயானந்தமூர்த்தி எம்.பி.

தமிழீழம் தவிர்ந்த வேறு எந்தத் தீர்வையும் தமிழ் மக்கள் ஏற்கப் போவதில்லை எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜெயானந்தமூர்த்தி சர்வதேச ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் கூறியுள்ளார்.

தமிழீழம் தவிர்ந்த வேறு எதனையும் ஏற்பதற்குத் தமிழ் மக்கள் தயாரில்லை என ஜெயானந்தமூர்த்தி கூறினார் என்பதிலிருந்து அவர் பாதுகாப்பான நாடொன்றில் தங்கியுள்ளார் என்ற உண்மையை உணர்ந்து கொள்ள முடியும்.

இதற்கு மேலாக இன்னுமோர் உண்மையும் உண்டு. அதாவது ஜெயானந்தமூர்த்தியிடம் இலங்கைக்குத் திரும்பும் எண்ணம் இல்லை என்பதே அதுவாகும்.

இந்த உண்மைகளுக்கு அப்பால், சர்வதேச ஊடகம் ஒன்றில் கருத்துக் கூறுவதற்குக் கிடைத்த சந்தர்ப்பத்தை வெறுவாயளந்து ஜெயானந்தமூர்த்தி பழுதாக்கி விட்டார்.

இரண்டு இலட்சம் மக்கள் தடுப்பு முகாம்களில் உருமாறி–உளம் பதறி வெளியேற வழியின்றி தவிக்கின்றனர். ஆயிரக்கணக்கான இளைஞர்–யுவதிகள் புனர்வாழ்வென்ற வகுதிக்குள் அடைக்கப்பட்டுள்ளனர்.

இதுதவிர காணாமல் போனவர்களின் உறவுகள் அழுதழுது கண்ணீர் வற்றி மனித வாழ்வே வெறுத்த நிலையில் வாழ்கின்றனர்.

வன்னி யுத்தத்தில் உயிரிழந்து போன சுமார் இருபதாயிரம் பொதுமக்களின் உறவுகள் பித்துப் பிடித்தவர்களாகத் தவிக்கின்றனர்.

இதில் ஏதேனும் ஒன்றைப் பற்றியாவது ஜெயானந்தமூர்த்தி முதன்மைப்படுத்திக் கூறியிருந்தால் அந்தச் செய்தி சர்வதேசத்திற்கு மீண்டும் ஞாபகப்படுத்துவதாக இருந்திருக்கும்.

இதைவிடுத்து தமிழீழம் தவிர்ந்த எதனையும் மக்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என ஜெயானந்தமூர்த்தி கூறியதன் மூலம் அவர் உணர்ச்சிவசப்பட்டுள்ளாரே தவிர, தமிழ் மக்களைத் துன்பத்திலிருந்து மீட்பதற்கான ஆரோக்கியமான சிந்தனையை அவர் புறந்தள்ளியுள்ளார்.

சுருங்கக் கூறின் அந்தக் காலத்தில் முற்றவெளியில் எங்களின் அரசியல் தலைவர்கள் கைதட்டல்களுக்காக ஆற்றிய 'தமிழீழம்' என்ற உரைக்கு ஒப்பான உரையாக ஜெயானந்தமூர்த்தியின் கருத்தைக் கொள்ளலாம்.

பதின்மூன்றாவது திருத்தச் சட்ட மூலத்தை நிறைவேற்றுவதற்கே அரசு தயாரில்லாத நிலையில் – சமஷ்டி என்றால் என்னவென்று பேரினவாத சிந்தனையாளர்கள் கேள்வி கேட்கும் நிலைமை இருக்கும் வேளையில்,

இந்திய தேசமும் தமிழ்நாடும் இலங்கை அரசுக்கு சோடச உபசாரம் செய்து கொண்டிருக்கும் கட்டத்தில் ஜெயானந்தமூர்த்தி போன்றவர்கள் பேசாமல் இருப்பதே நல்லது.

தமது உறுப்பினர்கள் இப்படியாகப் பேசுவதைத் தடுக்கும் உரிமையாவது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கொண்டிருக்க வேண்டும். இந்த உரிமை இல்லாதவர்களால் எந்த உரிமையையும் வென்றெடுக்க முடியாதென்பது அறுதியான உண்மை.

# இலவச பாடநூல் விநியோகத்திலுள்ள குறைபாடுகள் குறித்து அறிவிக்க கோரிக்கை

(கொழும்பு)

2010 ஆம் வருடத்திற்கான இலவச பாடநூல் விநியோகத்தில் ஏதேனும் குறைபாடுகள் காணப்படின் இது தொடர்பாக எதிர்வரும் நவம்பர் மாதம் 25 ஆம் திகதிக்கு முன்னதாக கல்வி வெளியீட்டுத் திணைக்களத்துக்கு தெரியப்படுத்துமாறு திணைக்களத்தின் ஆணையாளர் சகல பாடசாலை அதிபர்களையும் கேட்டுள்ளார்.

இது தொடர்பாக கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் ஆணையாளர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அடுத்த வருடத்திற்கான இலவச பாடநூல்களை சகல மாணவர்களுக்கும் கிடைக்கத் தக்கவாறு எதிர்வரும் டிசெம்பர் மாதம் 7 ஆம் திகதி ஒரே நாளில் பாடநூல்களை மாணவர்களுக்கு விநியோகம் செய்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வடக்கு கிழக்கு உட்பட நாட்டில் உள்ள ஏறக்குறைய 10 ஆயிரம் பாடசாலைகளில் கல்வி கற்கும் கிட்டத்தட்ட 40 இலட்சம் மாணவர்களுக்கு இந்நூல் விநியோகம் ஒரே தினத்தில் வழங்கப்படவுள்ளன. அனுப்பி வைக்கப்பட்டுள்ள பாட நூல்களில் ஏதாவது ஒன்று கிடைக்கப் பெறதாவிடத்து அது தொடர்பில் எதிர்வரும் நவம்பர் மாதம் 25 ஆம் திகதிக்கு முன்னர் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்துக்கு அறிவித்து பெற்றுக் கொள்ளுமாறு அதிபர்களை வேண்டப்படுவதாக அவ்வூடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை அரச, அரச சார்பற்ற பாடசாலை மாணவர்களுக்கான 2010 ஆம் ஆண்டுக்கான இலவச சீருடைகளை விநியோகிப்பதற்கான நடவடிக்கைகளை கல்வி அமைச்சு மேற்கொண்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஓ-6)

## சர்வதேச வெள்ளைப்பிரம்பு தின நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.விழிப்புலனற்றோர் சங்கம், யாழ்.லயன்ஸ் கழகம் ஆகியன இணைந்து நடத்தும் சர்வதேச வெள்ளைப்பிரம்பு தின நிகழ்வு இன்று சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையில் விழிப்புலனற்றோர் சங்கத்தலைவர் ஆ.மகேந்திரன், யாழ். லயன்ஸ் கழகத்தலைவர் லயன் எஸ்.தியாகலிங்கம் ஆகியோர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மக்கள் வங்கியின் யாழ். மாவட்ட பிராந்திய முகாமையாளர் சிவகுரு பத்மநாதன் கலந்து சிறப் பிப்பதுடன், சிறப்பு விருந்தினர்களாக கைதடி நவீல்ட் பாடசாலை அதிபர் வி.எஸ். மகேந்திரன், வைத்திய அதிகாரி திருமதி கே. உதயசீலன்,வடபிராந்திய பிரதம இணைப்பாளர் லயன் பி.ஆர். றஞ்சன், கௌரவ விருந்தினராக வடபிராந்திய உப ஆளுநர் சபை பொருளாளர் லயன் எஸ். சுந்தரேஸ்வரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஓ-4)

## மின்தடை பற்றிய அறிவித்தல்

அவசர திருத்த வேலைகள் காரணமாக நாளை ஞாயிற்றுக்கிழமையும் நாளை மறுதினம் திங்கட்கிழமையும் காலை 9 மணிமுதல் மாலை 5 மணிவரை கீழ்காணும் பிரதேசங்களில் மின் விநியோகம் தடைப்படும் என சுன்னாகம் மின்சார சபை பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

இதன் பிரகாரம் நாளை ஞாயிற்றுக்கிழமை கந்தரோடை, மாசியப்பிட்டி, பண்டத்தரிப்பு, இளவாலை, சங்கானை, மாதகல், வட்டுக்கோட்டை, சுழிபுரம், மூளாய், காரைநகர், வேலணை, ஊர்காவற்றுறை, அராலி, மானிப்பாய், கட்டுடை, சங்குவேலி, உடுவில், மருதனார்மடம், சண்டிலிப்பாய் ஆகிய பிரதேசங்களிலும் நாளை மறுதினம் திங்கட்கிழமை கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, தென்மராட்சிப் பிரதேசம் முழுவதும் ஆகிய பிரதேசங்களிலும் மின் விநியோகம் தடைப்படுமென அறிவித்துள்ளார். (ஓ-9)

## ஆசிரிய ஆலோசகர்களுக்கான பயில்வுச் செயலமர்வு

(அல்வாய்)

தமிழ்மொழியும் இலக்கியமும் தரம் 9 புதிய பாடத்திட்ட ஆசிரிய ஆலோசகர்களுக்கான பயில்வுச் செயலமர்வு தேசிய கல்வி நிறுவனத்தின் செயல்திட்ட அதிகாரியினால் தொலைநகல் சார்பாக நடத்தப்படவுள்ளது. தமிழ்மொழியும் இலக்கியமும் பாடத்தை அறிமுகம் செய்யும் ஒருநாள் செயலமர்வு ஒன்றை யாழ்ப்பாணத்தில் நடத்த தேசிய கல்வி நிறுவனம் முன்வந்துள்ளது.

இச் செயலமர்வு நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 8 மணிமுதல் 5 மணிவரை யாழ். வேம்படி மகளிர் உயர்தர பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இச்செயலமர்விற்கு தமிழ்பாட உதவிக் கல்விப் பணிப்பாளர், தமிழ்பாட ஆசிரிய ஆலோசகர், தமிழ் சிரேஷ்ட ஆலோசகர் உட்பட ஒவ்வொரு வலயத்திலிருந்தும் ஐந்து பேர் மட்டும் தவறாது கலந்து கொள்ள ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் சகல வலயக் கல்வி அலுவலகங்களுக்கும் வடமாகாண கல்வித் திணைக்கள மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் மு. இராதாகிருஷ்ணன் அறிவித்துள்ளார்.

மேலும் இச்செயலமர்வில் கலந்து கொள்பவர்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் மட்டும் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ஓ-4-19)

## கட்டடத் திறப்புவிழா

(அல்வாய்)

பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலயத்தின் புதிய கட்டடத் திறப்பு விழா இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு வித்தியாலய அதிபர் ச. திரவியராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா கலந்து சிறப்பிப்பதுடன் கௌரவ விருந்தினராக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கே. கணேஷ், சிறப்பு விருந்தினராக் யாழ். மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வே.தி. செல்வரத்தினம், நிக்கொட் நிறுவன உதவித் திட்டப் பணிப்பாளர் என்.எஸ்.ஆர். சிவரூபன், வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராஜா, பருத்தித்துறை பிரதேச செயலர் வரதீஸ்வரன், பாடசாலை கட்டட வேலை பொறியியலாளர் ஜி. சிவபாலன், பருத்தித்துறைக் கோட்டக் கல்வி அதிகாரி பா. ரகுநாதன், வித்தியாலய முன்னாள் அதிபர். ஆ. ஜெகநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஓ-4-19)

## விவசாய உற்பத்தி ஏற்றுமதி ஊக்குவிப்புச் சட்டத்தில் மாற்றம்

(கொழும்பு)

1992 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க விவசாய உற்பத்தி ஏற்றுமதி ஊக்குவிப்புச் சட்டத்தில் மாற்றம் கொண்டுவர அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. இதற்கான அமைச்சரவைப் பத்திரத்தை விவசாய அபி விருத்தி மற்றும் கமநல சேவைகள் அமைச்சர் மைத்திரிபால சிறிசேன சமர்ப்பித்தார்.

ஏற்றுமதி விவசாய உற்பத்திப் பொருட்கள் தொடர்பாக ஆய்வுகள், அபிவிருத்தி மற்றும் விற்பனை நடவடிக்கைகள் தொடர்பாக பரவலான ஒரு சேவையை மேற்கொள்வதற்கான வகையில் விவசாயத் திணைக்களத்துக்கு மேலதிக அதிகாரங்களை வழங்கும் பொருட்டு இந்த திருத்தச் சட்டம் கொண்டுவரப்படவுள்ளது. (ஓ-6)

**அன்னியரை எதிர்த்து தன்னுயிரைக் கொடுத்த தமிழ் மன்னன் பண்டார வன்னியன் நினைவாக...**

## மூத்த வரலாற்று ஈழம் முகிழ்த்ததிம் முற்சிலையே

கச்சிலை மடுவின் மண்ணில் காலத்தின் கணிப்புக்காட்ட
காத்திரமாக நட்ட கருங்கல்லே கற்சிலையே
நச்சிலை இல்லா நாட்டை நச்சியே நாடியோரை
நான்விடே னென்றவனின் நாமஞ்சொல் நற்சிலையே
பொச்சிலை புகையையூட்டிப் போக்கியே பொசுக்குதல்போல்
போரிலே மக்கள் சாகப் பொங்கியோன் பொற் சிலையே
முச்சிலை வேந்தர் மூவர் முத்தமிழ்க் காக்கினாரோ
மூத்தவர லாற்றுஈழம் முகிழ்த்ததிம் முற்சிலையே

**கலாபூஷணம் வ. கந்தசாமி**
பெரிய தாய் அகம், வரணி.


## சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்
## மனிதன் தனது விதியைத் தானே அமைக்கிறான்



உனக்குள் இருக்கும் ஆற்றல் புறத்தில் வெளிப்படும் வகையில் நீ வளர வேண்டும். வேறு எவரும் உனக்குக் கற்பிக்கவும் முடியாது. உன்னை ஆன்மீகவாதி ஆக்கிவிடவும் முடியாது. உனது சொந்த ஆன்மாவைத் தவிர வேறு ஆசிரியர் யாருமில்லை.

மக்கள் பொதுவாக வாழ்க்கையிலுள்ள குறைபாடுகளை எல்லாம் தங்களுடன் வாழ்பவர்கள் மீதோ, அல்லது அது தவறினால் தெய்வத்தின் மீதோ சுமத்துகிறார்கள். அல்லது புதிதாக அவர்கள் ஏதோ பேய் பிசாசு என்று கற்பித்துக் கொண்டு அதைத் தலைவிதி என்று சொல்கிறார்கள்.





ஈகிள் காப்புறுதி PLC இன் 49 ஆவது பிராந்தியக் கிளை யாழ்ப்பாணத்தில் அண்மையில் வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது.இவ் வைபவத்தில் யாழ். பிராந்திய முகாமையாளர் க.செல்வராஜன் தலைமை உரை நிகழ்த்துவதையும், வாடிக்கையாளரும் பிரபல தொழிலதிபருமான ESP நாகரத்தினம் காப்புறுதிப் பத்திரத்தை முகாமைத்துவப் பணிப்பாளர் தீபால் சூரியாராச்சியிடம் கையளிப்பதையும், இம்முறை 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் யாழ்.மாவட்டத்தில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற மாணவன் செல்வன் லோ.ஸ்ரீஹர்சனுக்கு புலமைப்பரிசிலை வழங்குவதையும் படங்களில் காணலாம்.

## மாகாண அரச ஆசிரியர்கள் மத்திய அரச சேவைக்கு மாற்றம்

(கொழும்பு)

மாகாண் அரச சேவையில் 1989.12.31 ஆம் திகதிக்குப் பின்னர் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ள கல்வித் துறை சார்ந்த பட்டதாரிகள், டிப்ளோமா மற்றும் பயிற்சி நெறி ஆசிரியர்களுக்கு மாகாண அரச சேவையிலிருந்து மத்திய அரச சேவைக்கு மாற்றம் பெறுவதற்கு இருந்த தடையை நீக்க அமைச்சரவை முடிபு செய்துள்ளது.

கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த இதற்கான அமைச்சரவைப் பத்திரத்தை சமர்ப்பித்தார். இந்தத் தீர்மானத்தின் மூலம் மாகாண ஆசிரியர் சேவையில் உள்ளவர்களுக்கு தேசிய மட்டத்திலான பாடசாலைகளில் கடமையாற்ற வாய்ப்புக் கிட்டுகிறது. (ஓ-6)

# ஐ.நா.அமைப்பு சான்றிதழ் அளித்த பின்னரே 1.86 இலட்சம் தமிழர்கள் மீள்குடியமர்த்தப்படுவர்

## இந்தியாவில் அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் தெரிவிப்பு

(சென்னை)

கண்ணிவெடிகளை அகற்றுவது மனித நேய அடிப்படையிலான உதவிகளைச் செய்வது குறித்து ஐ.நா.அமைப்பு சான்றிதழ் அளித்த பிறகே இலங்கை முகாம்களில் உள்ள 1.86 இலட்சம் தமிழர்கள் மீள்குடியமர்த்தப்படுவார்கள் என்று அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

அதேசமயம் கண்ணிவெடிகளை அகற்றுவதுதான் அங்கேயுள்ள பிரச்சினை எனவும் அவர் கூறினார்.

இந்தியாவுக்கு விஜயம் செய்துள்ள அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான், முதல்வர் கருணாநிதியை அவரது இல்லத்தில் நேற்று முன்தினம் மாலை சந்தித்துப் பேசினார். அரைமணி நேரத்திற்கும் மேலாக இந்தச் சந்திப்பு நடைபெற்றது.



இதைத் தொடர்ந்து ஆறுமுகம் தொண்டமான் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில்,

இலங்கை முகாம்களில் 3 இலட்சம் தமிழர்கள் இருப்பதாகக் கூறுகிறார்கள்.ஆனால் 1.86 இலட்சம் தமிழர்களே உள்ளனர். தமிழகத்திலிருந்து எம்.பி.க்கள் குழு வருவதற்கு முன்பே 24 ஆயிரம் இலங்கைத் தமிழர்கள் அவர்களது இருப்பிடங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

தமிழக எம்.பி.க்கள் குழு வந்து சென்ற பிறகு இதுவரை 57ஆயிரம் தமிழர்கள் அவர்களின் வாழ்விடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இலங்கையில் தமிழர்கள் வாழும் பகுதிகளில் புதைத்து வைக்கப்பட்டுள்ள கண்ணி வெடிகளை அகற்றும் பணியில் இந்தியக் குழு ஈடுபட்டு வருகிறது.மேலும் ஒரு குழுவை அனுப்புவதாக இந்திய அரசு கூறியுள்ளது.

இலங்கைத் தமிழர்களை அவர்களின் வாழ்விடங்களுக்கு அனுப்ப ஐ.நா.விடம் இருந்து சான்றிதழ் பெறுவது அவசியம். தமிழர்களின் வாழ்விடங்களில் கண்ணி வெடிகள் ஏதுமில்லை என்றும் அவர்களுக்கு அடிப்படை வசதிகள் ,வருமானத்துக்கான வழி போன்றவை ஏற்படுத்தித் தரப்பட்டுள்ளன எனவும் அகதிகள் நல்வாழ்வுக்கான ஐ.நா. அமைப்பின் அதிகாரியிடம் இருந்து சான்றிதழ் பெற வேண்டும்.

இப்போது 1.86 இலட்சம் தமிழர்களின் வாழ்விடங்களில் கண்ணிவெடிகளை அகற்றுவதுதான் பிரச்சினையாகவுள்ளது. குடியமர்த்தப்பட்ட பிறகு அவர்கள் தொழில் செய்யவோ , விவசாயம் செய்யவோ முடியும்.

இலங்கையில் நிவாரணப்பணிகளை மேற்கொள்ள மேலும் ரூ.500 கோடி தரு[...]தாக இந்திய அரசு கூறியுள்ளது. இதற்கான திட்டத்தை இலங்கை அரசின் சார்பில் கொடுக்[...] இருக்கிறோம். எந்தெந்த திட்டங்களுக்கு இந்தப் பணத்தை செலவிடுவது என்ப[...] குறித்து விவாதிக்க இலங்கை அதிகாரிகள் குழு இந்தியா வரவுள்ளது என்றார். (ஓ-6)

## ஜெய்ப்பூர் பெ.றறோல் சேமிப்புக் கிடங்கில் பயங்கர தீ விபத்து; 5 பேர் பலி



ஜெய்ப்பூர் அருகே பெற்றோல் சேமிப்புக் கிடங்கில் ஏற்பட்ட பயங்கரத் தீ விபத்தில், ஐந்து பேர் தீயில் கருகிப் பலியாகினர்.மேலும் 150 பேர் காயம் அடைந்தனர்.

ராஜஸ்தான் ஜெய்ப்பூரில் சீதாப்பூர் அருகே உள்ள இந்தியன் எண்ணெய்க் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான பெற்றோல் சேமிப்புக் கிடங்கு உள்ளது.இங்கு நேற்று முன்தினம் வழக்கமாக எடுக்கப்படுவது போல, குழாய் மூலம் பெற்றோல் எடுக்கும் பணிகள் நடந்தன. அப்போது திடீரென வெடி விபத்து ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து சேமிப்புக் கிடங்கு முழுவதும் தீ மளமளவென பரவியது.

இந்தப் பயங்கர தீ விபத்தில்,ஐந்துபேர் தீயில் கருகி பரிதாபமாக இறந்தனர். 150 இற்கும் மேற்பட்டவர்கள் பலத்த காயம் அடைந்தனர்.காயமடைந்தவர்கள்" அம்புலன்ஸ் வண்டி மூலம் அருகில் உள்ள மருத்துவமனைகளுக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

முன் எச்சரிக்கை நடவடிக்கையாக, அப்பகுதி முழுவதற்கும் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டது. விபத்து நடந்த இடத்தில் பயங்கரமாக எரிந்த தீயால், அந்தப் பகுதி முழுவதையும் கரும்புகை சூழ்ந்தது. பாதுகாப்புக் கருதி, அருகாமையில் வசித்து வருபவர்கள் வேறு இடங்களுக்குச் செல்லும்படி அறிவுறுத்தப்பட்டனர். (ஓ-6)


அருகிவரும் எமது மரபுவழிக் கலைகளுக்கு புத்துயிர் அளிக்கும் நோக்கோடு

திருமறைக் கலாமன்றம்

நடத்தும்

கிராமியக் கலைவிழா

கிராமியக் கலைகள் - கிராமியப் பாடல்கள் - கிராமிய நடனங்கள்
ஒன்றாகச் சங்கமிக்கும் கலைத்திருவிழா

அனுமதி இலவசம்

இடம்
கலைத்தூது கலையகம்
286, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

31.10.2009 சனி பி.ப.5.00 மணி

யாழ்.மாவட்டத்தின் பல்வேறு பிரதேசக் கலைஞர்கள் வழங்கும்
காவடி, உழவர் நடனம் , புரவி நடனம், வேப்பிலை நடனம் , அனுமான் நடனம், கும்மி, பொம்மலாட்டம், கோலாட்டம், கரகாட்டம், வில்லிசை.

01.11.2009 ஞாயிறு பி.ப.2.00 மணி

பிரதேசச் செயலகங்கள் மூலமாகத் தெரிவுசெய்யப்பட்ட கிராமங்களில்
திருமறைக்கலாமன்றத்தால் நடத்தப்பட்ட கிராமியப்பாடல் போட்டிகளின்
நிறைவுப் போட்டிகளும், பரிசளிப்பும்

07,08.11.2009 சனி,ஞாயிறு பி.ப.5.00 மணி

அவிசாவளை, பாணந்துறையைச் சேர்ந்த தென்னிலங்கைத் திருமறைக் கலாமன்றக் கலைஞர்களும் சாவகச்சேரி, நல்லூர், இளவாலை, இணுவில், குருநகர் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த யாழ்.மாவட்டக் கலைஞர்களும் வழங்கும்
கிராமிய நடனங்கள்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

திருமறைக் கலாமன்றம், யாழ்ப்பாணம்

(C/3625)



"எதிர்காலத்தை உறுதிசெய்வோம்"

(31-10-2009 (சனிக்கிழமை) காலை10.30மணி)

வன்னிப்பிரதேசத்தில் இருந்து இடம்பெயர்ந்து குடாநாட்டில் மீளக்குடியமர்த்தப்பட்டிருக்கும் மாணவர்களுக்கான உயர்கல்வி வேலைவாய்ப்பு தெடர்பான கருத்தரங்கும் ,கலந்துரையாடலும்.

வன்னிப்பிரதேசத்தில் இருந்து இடம்பெயர்ந்து தற்போது குடாநாட்டில் மீளக்குடியமர்த்தப்பட்டிருக்கும் மாணவர்களுக்கான"எதிர்காலத்தினை உறுதிசெயிவோம்" என்னும் தலைப்பில் IIS City Campus நிறுவனத்தினால் கருத்தரங்கும் கலந்துரையாடலும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இக் கலந்துரையாடலில் பங்கு பற்றி உயர்கல்விக்கூடாக உங்கள் எதிர்காலத்தை வளப்படுத்திக்கொள்ளும் இவ் வாய்ப்பினை பயன்படுத்திக்கொள்ளுங்கள்.

இக்கருத்தரங்கினூடாக வழங்கப்பட இருக்கின்ற சலுகைகள் மீளக் குடியமர்த்தப்பட்டிருக்கும் மாணவர்களுக்கு மட்டுமே என்பதை அறியத்தருகின்றோம்.

விடயம் :- உள்நாட்டு/வெளிநாட்டு உயர்கல்வியும் வேலை வாய்ப்பும்

தகைமை :- 17 வயதினை பூர்த்தி செய்தவராகவும் க.பொ.த சாதாரணதர சித்தியடைந்தவராகவும்இருக்க வேண்டும் .

நோக்கம் :- 1.உள்நாட்டு உயர்கல்வி வாய்ப்பு
2.வெளிநாட்டு உயர்கல்வி வாய்ப்பு
3.கல்வித்தகமையை உயர்த்திக்கொள்ளல்
4.வேலை வாய்ப்புக்கள்
5.பொதுக்கல்வித்தகைமையை உயர்த்திக்கொள்ளல்
6.பொருளாதார ரீதியான நன்மையை பெற்றுக்கொள்ளல்

இடம்:- IIS CITY CAMPUS
இல 200 சிவன் பண்ணை வீதி
யாழ்ப்பாணம்

குறிப்பு :- மாணவர்கள் பெற்றோருடன் வந்து பங்குபற்றுவது விரும்பத்தக்கது

IIS CITY CAMPUS
200 சிவன் பண்ணை வீதி,யாழ்ப்பாணம்.
(வைத்தீஸ்வராக்கல்லூரிக்கு அருகில்)
தொ.இல 021 222 8060, 021 7200200

(C/3626)





சன்டெல் நிறுவனத்தின் வாடிக்கையாளர் ஒன்று கூடல் நிகழ்வு கடந்த திங்கட்கிழமை பஸ்தியான் விடுதியில் இடம் பெற்றது. இந்நி கழ்வில் சன்டெல் நிறுவனத்தின் நிர்வாகப் பணிப்பாளர் ஜெர்ரமி ஹக்ஸ்ரபில், யாழ். மேயர் யோகேஸ்வரி பற்குணராசாவிற்கு நினைவுப்பரிசு வழங்குவதையும் நிகழ்வில் கலந்து கொண்ட பிரமுகர்கள் மற்றும் வாடிக் கையாளர்களையும் படங்களில் காணலாம்.

# உதைபந்தாட்டப் போரில் பற்றிக்ஸ் கல்லூரி வெற்றி

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும், சென்.பற்றிக்ஸ் கல்லூரிக்கு மிடையில் இடம்பெற்ற உதைபந்தாட்டப் போரின் மூன்று போட்டிகளில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி வெற்றி பெற்றுள்ளதுடன் ஒரு போட்டி சமநிலையில் முடிவடைந்துள்ளது.

இரு கல்லூரிக்குமிடையில் வருடந்தோறும் நடைபெறும் உதைபந்தாட்டப் போர் நேற்று யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதில் 13வயதுப் பிரிவினருக்கிடையிலான போட்டியில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. இடைவேளை வரையும் இரு அணிகளும் கடுமையாக போராடின எனினும் இடைவேளைக்குப் பின்னர் சென்.பற்றிக்ஸ் கல்லூரி ஒரு கோலைப் போட்டு தனது வெற்றியை உறுதி செய்தது.

15 வயதுப் பிரிவு

15 வயதுப் பிரிவுக்குட்பட்ட போட்டியில் இறுதி வரை இரு அணிகளும் கோல் எதனையும் போடாமல் சமநிலையில் போட்டி முடிவுற்றது.

17 வயதுப் பிரிவு


17 வயதுப்பிரிவு அணிகளுக்கிடையில் விறுவிறுப்பாக நடைபெற்ற போட்டியில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி 4 கோல் களைப் போட்டு வெற்றி பெற்றது.

இடைவேளை வரை இரண்டு கோல் களையும் இடைவேளைக்குப் பின்னர் இரண்டு கோல் களையும் போட்டு சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி 4:0 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது.

19 வயதுப் பிரிவு

சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணிக்கும் யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் இடையில் நடைபெற்ற போட்டியில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (சு-27)

# இந்திய-பாகிஸ்தான் தொடர் விரைவில் நடைபெறும்-யூனிஸ்



(கராச்சி)

இந்தியா-பாகிஸ்தான் அணிகள் மோதும் கிரிக்கெட் தொடர் விரைவில் நடத்தப்படும் என பாகிஸ்தான் அணித்தலைவர் யூனிஸ்கான் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

சர்வதேச கிரிக்கெட் அரங்கில் இந்தியா-பாகிஸ்தான் அணிகள் மோதும் போட்டிகளுக்கு அதிக மவுசு உண்டு. ஆனால் சமீபத்தில் மும்பையில் நடந்த பயங்கரவாத தாக்குதலை அடுத்து இவ்விரு அணிகளும் எவ்வித தொடருக்கான ஒப்பந்தமும் செய்துகொள்ளவில்லை.

தவிர இந்த ஆண்டு ஆரம்பத்தில் இவ்விரு அணிகளுக்கு இடையில் நடக்கவிருந்த டெஸ்ட் தொடரையும் இந்திய கிரிக்கெட் சபை (பி.சி.சி.ஐ) ரத்து செய்தது.

இதனால் பாகிஸ் தான் கிரிக்கெட் சபைக்கு (பி.சி.பி) பலகோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டது.

இதனை ஈடுகட்ட பி.சி.பி தலைவர் இசாஜ்பட் பி.சி.சி.ஐ உடன் பேச்சுவார்த்தை நடத்த இந்தியா வந்துள்ளார்.

இது குறித்து பாகிஸ்தான் அணித்தலைவர் யூனிஸ்கான் கூறியதாவது,

பி.சி.சி.ஐ உடன் பேச்சுவார்த்தை நடத்த இந்தியா சென்றுள்ள இசாஜ் பட் நல்ல செய்தியுடன்தான் நாடுதிரும்புவார் என எதிர்பார்க்கிறேன்.

இந்தியா - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையில் தொடர் நடத்தப்படும் பட்சத்தில் இரு நாடுகளுக்கு இடையில் பகைமை விலகி நட்புறவு மலரும் வாய்ப்பு உள்ளது.

சமீபத்தில் தென்னாபிரிக்காவில் நடந்த சம்பியன்ஸ் (மினி உலக கோப்பை) தொடரின் லீக் போட்டியில் பாகிஸ்தான் அணி இந்தியாவை வீழ்த்தியதால் அரையிறுதியில் கண்ட தோல்வியை ரசிகர்கள் ஏற்றுக் கொண்டனர் என நினைக்கிறேன். இவ்வாறு யூனிஸ்கான் கூறினார்.

# இந்தியாவுக்கு எதிரான ஒருநாள் தொடரில் ஜெயசூரியா பின்வரிசையில் களமிறங்குவார்

## அணித்தலைவர் சங்கக்காரவின் திட்டம்

(கொழும்பு)

இந்தியாவுக்கு எதிரான ஒருநாள் தொடரில் இலங்கை அணியின் உபுல் தரங்க மற்றும் டில்ஷான் ஆரம்ப வீரர்களாக களமிறங்குவார்கள் எனவும் சனத்ஜெயசூர்யா பின்வரிசையில் களமிறங்குவார் எனவும் இலங்கை அணித்தலைவர் சங்கக்கார தெரிவித்துள்ளார்.



இந்திய சுற்றுப்பயணம் செய்யவுள்ள இலங்கை அணி மூன்று டெஸ்ட் இரண்டு இருபது-20 மற்றும் 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்கிறது. முதல் டெஸ்ட் அடுத்த மாதம் 16ஆம் திகதி அகமதாபாத்தில் ஆரம்பமாகிறது. முதல் ஒருநாள் போட்டி எதிர்வரும் டிசம்பர் 15ஆம் திகதி ராஜகோட்டில் நடக்கிறது. இத்தொடர் குறித்து இலங்கை அணித் தலைவர் சங்கக்கார கூறியதாவது, இந்தியா மண்ணில் இதுவரை 14டெஸ்ட் போட்டியில் விளையாடிய இலங்கை அணி 8 தோல்வி, 6 சமனிலையை பதிவு செய்துள்ளது. இம்முறை இலங்கை வீரர்கள்மிகுந்த கவனமுடன் செயல்பட்டு, முதல் முறையாக இந்திய மண்ணில் டெஸ்ட் தொடரை கைப்பற்ற வேண்டும். இதற்காக வீரர்கள் ஆட்டத்தில் மட்டும் கவனம்செலுத்த வேண்டும். மைதானத் தின்தன்மை, தட்பவெப்ப நிலை, உணவு குறித்தபுகார்களை வீரர்கள் தவிர்க்க வேண்டும். இந்தியாவுக்கு எதிரான ஒருநாள் போட்டியில் ஆரம்ப வீரராக டில்ஷானுடன் உபுல் தரங்க களமிறங்க உள்ளார். அதிரடி வீரர் ஜெயசூரியா பின்வரிசையில் களமிறக்கப்படவுள்ளார். இவ்வாறு சங்கங்கார கூறினார்.

# ஆசிரியர்களை பல்கலைக்கழகத்திற்கு அனுமதிப்பதற்கு விண்ணப்பம் கோரல்

2009/2010 கல்வியாண்டில் ஆங்கிலத்தை ஒரு பாடமாகக் கொண்ட கலைப்பட்ட, விஞ்ஞானப் பட்டப் பாடநெறிகளைத் தொடர்வதற்கு இலங்கைப் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிப்பதற்காக பொது ஆங்கிலம்/ கலை (ஆங்கிலப் பாடத்துடன் கலை) தகைமை (வெளிவாரிப்) பரீட்சையில் சித்தியடைந்துள்ள அரச மற்றும் அரசாங்க அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரிகள் 2005ஆம் வருடத்தில் அல்லது அதன் பின்பு நடத்தப்பட்ட பொது விஞ்ஞான/கலை (ஆங்கிலப் பாடத்துடன்) தகைமை. வெளிவாரி பரீட்சையில் சித்தியடைந்திருப்பவராகவும் விண்ணப்பப் பத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதி நாளன்று ஆசிரியராக 5வருட சேவையை பூர்த்தி செய்திருக்க வேண்டியதுடன் நியமனம் நிரந்தரமாக்கப்பட்டதாக இருக்க வேண்டும்.

அத்துடன் ஆசிரிய கல்லூரி, கல்விக் கல்லூரி, பல்கலைக்கழகம் என்பவற்றிலோ தேசிய கல்வி நிறுவனத்தின் பாடநெறிகளை தொடர்வதற்காக பதிவு செய்யாதவராக இருக்க வேண்டும்.

விண்ணப்பத்திர மாதிரிப் படிவத்திற்கேற்ப தயாரித்து இரண்டு பிரதிகளாக 2009-11-16 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு மனிதவளஅபிவிருத்திக் கிளை, கல்வி அமைச்சு இசுருபாய, பத்திரமுல்லை எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். தபால் உறையின் இடப்பக்க மேல் மூலையில் 2009/2010 இலங்கை பல்கலைக் கழகங்களுக்கு அனுமதி பெறுவதற்கான விண்ணப்பம் என்று குறிப்பிடப்படல் வேண்டும். மேலதிக விபரங்களை 30/10/2009 அன்று வெளியான வர்த்தமானியில் அல்லது வலம்புரியில் பார்வையிடலாம். (சு-3)

# செரினா மீண்டும் நம்பர்-1



(டோகா)

டென்னிஸ் தரவரிசைப் பட்டியலில் அமெரிக் காவின் செரினா வில்லியம்ஸ் மீண்டும் நம்பர்-1 இடத்துக்கு முன்னேறி யுள்ளார்.

கட்டாரில், உலகில் முதல்-8 வீராங்கனைகள் பங்கேற்கும் டோகா ஓபன் சம்பியன்ஷிப் டென்னிஸ் தொடர் நடக்கிறது.

இதில் வையிட் பிரிவில் இடம் பெற்றுள்ள ரஷ்யாவின் டினரா சபினா, தனது முதல் போட்டியில் செர்பியாவின் ஜெலினா ஜான் கோவிச்சை சந்தித்தார்.

முதல் செட்டில் 1:1 என இருவரும் சமநிலை வகித்த போது முதுகு வலி காரணமாக சபினா போட்டியிலிருந்து பாதியில் விலகினார். இதனால் ஜான் கோவிச் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டார்.

தவிர காயம் காரணமாக தொடர்ந்து போட்டியில் பங்கேற்க முடியாத காரணத்தால் தொடரிலிருந்தும் வெளியேறுவதாக சபினா அறிவித்தார்.

இதனையடுத்து டபிள்யூ.டி.ஏ. டெனிஸ் தரவரிசைப்பட்டியலில் சபினா நம்பர்-1 இடத்தை இழந்தார்.

இதனால் இரண்டாவது இடத்திலிருந்த அமெரிக்காவின் செரினா வில்லியம்ஸ் மீண்டும் முதலிடத்திற்கு முன்னேறினார்.

இத்தொடரில் சபினாவுக்கு பதிலாக உலகின் நம்பர்-9 வீராங்கனையான ரஷ்யாவின் ஸ்வனரேவா தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

இத் தொடரில் மரூன் பிரிவில் இடம் பெற்றுள்ள செரினா, தனது முதல் போட்டியில் ரஷ்யாவின் கஸ்னட் சோபாவை வீழ்த்தினார்.

இரண்டாவது போட்டியில் தனது சகோதரி வீனஸ் வில்லியம்ஸை வீழ்த்தினார்.

இதன் மூலம் இத் தொடரின் அரையிறுதிக்கு முன்னேறும் வாய்ப்பை பிரகாசப்படுத்திக் கொண்டார் செரினா.

## அலையில் சிக்குண்ட...

துள்ள கரையோரப் பாதையில் நின்றிருந்த இளைஞர் ஒருவர் நேற்று முன்தினம் பகல் வீதியில் செல்லும் வாகனங்களுக்குக் கல் எறிந்துள்ளார்.

இதன் காரணமாக இரண்டு வாகனங்களின் கண்ணாடிகள் உடைந்தன. இதன் போது வீதியில் சென்ற இராணுவ வாகனத்திற்கும் அவர் கல்லெறிந்துள்ளார்.

இந்த நிலையில் இராணுவ வாகனம் நிறுத்தப்படவே அவர் அருகில் உள்ள புகையிரதக் கடவைக்குப் பாய்ந்து சென்றுள்ளார். இதன்போது புகையிரதம் ஒன்று வரவே அதற்கும் அவர் கல்லெறிந்துள்ளார்.

உடனடியாக புகையிரதம் நிறுத்தப்பட்ட போது இளைஞன் கடலில் குதித்துள்ளார். இந்த நிலையிலேயே பொதுமக்கள் இருவரும் பொலிஸார் ஒருவரும் கடலில் இறங்கி அவரைத் தாக்க முயன்றனர்.

பொதுமக்கள் இருவர் குறித்த தமிழ் இளைஞரைப் பலமாகத் தாக்கியமையைத் தொலைக்காட்சி கமராவின் மூலம் காண முடிகின்றதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இளைஞர் தம்மைத் தாக்க வேண்டாம் எனக் கும்பிட்டுக் கேட்டுக் கொண்டபோதும் அவரைக் கரைக்கு வரவிடாமல் பொதுமக்கள் இருவரும் தடிகளால் தாக்கியுள்ளனர்.

இதனையடுத்துத் தாக்குதலைச் சமாளிக்க முடியாத இளைஞர் கடலலைக்கு மத்தியில் பின்னால் சென்றபோது அலை அவரை இழுத்துச் சென்றுள்ளது.

இந்த நிலையிலேயே அவர் மரணமாகியுள்ளார். இதேவேளை பம்பலப்பிட்டிக் கடலுக்களுக்குள் குதித்தபோது தாக்கப்பட்டு உயிரிழந்த இளைஞனின் சடலம் நேற்றுக் கரையொதுங்கியது.

இத் தகவலைப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிமல் மெதிவக்க தெரிவித்தார். சடலம் கரையொதுங்கிய இடத்துக்குச் சென்ற அவ் இளைஞனின் சகோதரர் சடலத்தை அடையாளம் காட்டினார் எனவும் பொலிஸ் பேச்சாளர் கூறினார்.

இந்த இளைஞரைத் தாக்கியதாகக் கருதப்படும் பொலிஸ் உத்தியோகத்தரை விசேட பொலிஸ் குழு கைது செய்துள்ளது.கொழும்புக் குற்றப்புலனாய்வுப் பிரிவின் விசேட பொலிஸ் உத்தியோகத்தர்கள் கொண்ட குழு இவரைப் பம்பலப்பிட்டிப் பொலிஸ் நிலையத்தில் வைத்துக் கைது செய்ததாகப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இச் சம்பவம் இடம்பெற்றபோது கடற்கரைக்குச் சென்றதாகக் கூறப்படும் 6 பொலிஸ் உத்தியோகத்தர்கள் உட்பட 10 பேரிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பம்பலப்பிட்டிக் கடலில் மூழ்கடிக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்ட இளைஞர் தமிழர் என அடையாளம் காணப்பட்டுள்ளது. இவர் இரத்மலானையைச் சேர்ந்த 26 வயதான பாலவண்ணன் சிவக்குமார் என அவரது சகோதரர் அடையாளம் காட்டியுள்ளார். இவர் ஒரு மனநோயாளி எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-5)

## எதிர்காலத்தை உறுதி செ
## கருத்தரங்கும் கலந்துரை

(யாழ்ப்பாணம்)

வன்னி பிரதேசத்திலிருந்து இடம்பெயர்ந்து தற்போது குடாநாட்டில் மீளக்குடியமர்த்தப்பட்டிருக்கும் மாணவர்களுக்கான எதிர்காலத்தினை உறுதி செய்வோம் எனும்

தலைப்பில் ஐ.ஐ.எஸ்
Campus) நிறுவனத்
கருத்தரங்கும் கலந்
காலை 10.30 மணி
பண்ணை வீதி, யாழ்
ரியிலுள்ள சிற்றி கம்ப
பெறவுள்ளது.
உயர் கல்வியூடாக
படுத்திக் கொள்ளும்
படும் இக் கருத்தரங்கி
செய்த க.பொ.த. (சா/த
பங்குபற்றலாம் என
ளது.

## திருப்பதி...

ஒன்றில் திருப்பதி மலைக்குச் செல்வார் என இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன. இதையடுத்து அவர் பிற்பகல் 1.30 மணிக்கு திருப்பதி ஏழுமலையானைத் தரிசனம் செய்கின் றார்.

அவருக்கு தேவஸ்தானம் சார்பில் சிறப்பான வரவேற்று அளிக்கப்படுகின்றது. ராஜபக்ஷவின் வருகைக்கு அங்குள்ள தமிழர் அமைப்புக்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன.

இதனால் அவருக்கு வரலாறு காணாத பலத்த பாதுகாப்பு அளிக்க ஆந்திர அரசு முடிபு செய்துள்ளது. ரேணிகுண்டா விமான நிலையத்தில் ஏராளமான பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதி செல்லும் வழி நெடுகிலும் பொலிஸ் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அந்தச் செய்தியில் குறிப்பிடப்படுகின்றது. (ச-5)

## ஊடகவி

கைத் தளமாகக் கொண்
ளைப் பாதுகாக்கும் ச
ரின் பிரதம ஆசிரியர் பி
மற்றும் செய்தி ஆசிரிய
ஆகியோருக்கு ஏற்பட்டு
தல் தொடர்பாக உரிய
தப்பட வேண்டும் எனக்
சண்டே லீடரின் நிர்வ
விக்கிரமதுங்க இந்த வரு
ரது அலுவலகத்திற்கு அ
லப்பட்டு விசாரணைகள்
யிலேயே இந்த அச்சுறுத்
ளமையைக் குறித்த அ
யுள்ளது.
ஜென்ஸுக்கும் முஸ்
வாரத்தில் பல அச்சுறுத்த
துள்ளன. அக் கடிதங்களி
துமாறு அவர்கள் எச்சரி
குறிப்பிடத்தக்கது.

## 32-வது பொலிஸ் மா...

பாலசூரிய நியமிக்கப்படுவார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையின் 32-வது பொலிஸ் மாஅதிபராக மகிந்த பாலசூரியவின் பெயரை ஜனாதிபதி அறிவிப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது. பொலிஸ் திணைக்களத்தில் தற்போது பதவி வகிக்கும் சிரேஷ்ட பொலிஸ் மாஅதிபர்களில் மகிந்த பாலசூரிய சேவை மூப்புடையவர் எனக் குறிப்பிடப்படுகின்றது.

மகிந்த பாலசூரிய தற்போது நிர்வாகம் மற்றும் விசேட அதிரடிப் படைஆகிவற்றின் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றி வருகின்றார். 1978 ஆம் ஆண்டு பயிலுநர் பொலிஸ் அத்தியட்சகராக மகிந்த பாலசூரிய பொலிஸ் சேவையில் இணைந்து கொண்டார். (ச-5)

## இரு தேர்தல்கள் ஒரே நாளி

ஆணையாளரைச் சந்தித்தபோதே அவர் இந்தக் கருத்தினைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஐ.தே.கவின் பிரதித்தலைவர் கருஜயசூரிய தெரிவித்துள்ளதாவது;

இரு தேர்தல்களும் ஒரேநாளில் இடம்பெறும் பட்சத்தில் பல்வேறு மே டிகள் இடம்பெறலாம் என தமதுகட்சி தேர் ல் ஆணையாளருக்கு ஆட்டியுள்ளது.

இதுதவிர தே ல்களின் போது தேர்தல் எதிர்க் கட்சிகளி ரிய பாதிப்புக்கள் ஏற்படுவதற்கான ள் அதிகம் உள்ளன. இதேவேளை காலத்தில் நடைபெறவுள்ள தேர்தலுக்கு மு வடபகுதியில் இடம்பெயர்ந்த மக்களை மீளக் டியமர்த்துவதன் அவசியத்தை ஐக்கிய தேசியக் கட்சி வலியுறுத்தியுள்ளது.

எதிர்காலத் தேர்தலில் ஏற்படக்கூடிய நிலைமைகள் தொடர்பாக இதன் போது நீண்ட நேரம் கலந்துரையாடப்பட்டது.ஜனாதிபதித்

தேர்தலையும் பொதுத் தே
தினத்தில் நடத்துவதற்கு அ
அபிப்பிராயம் நிலவுவதாக
பேச்சாளர் குறிப்பிட்டுள்ளத
கள் நிலவுகின்றன.
ஒரே தினத்தில் தேர்தலை
மூலம் பல்வேறு முறைகே
என்பது குறித்த எதிர்க்கட்சிக்
கப்படுமா எனவும் தேர்தல்க
ரிடம் வினவியதாக அவர் கு
ஊடகங்கள் மூலம் மேற்
சட்ட விரோத நடவடிக்கைகள்
கத்தைப் பயன்படுத்தல், பெ
சாட்டுக்களை சுமத்துதல் பே
ளைத் தடுப்பதற்கு நடவடிக்
தேர்தல்கள் ஆணையாளரி
விடுத்ததாக கரு ஜயசூரிய கூ

## புலிகளின் சர்வதேச வலை...

விடுதலைப்புலிகளின் சர்வதேச புலனாய்வுப் பிரிவின் தலைவர் கதிர்காமர்தம்பி அரவிகன், அமெரிக்காவிலுள்ள இராஜேந்திரன் பாலசிங்கம், உலக ஈழத் தமிழ் இளைஞர்களின் அமைப்பின் தலைவர் அன்டு வெல்மன், கனடாவிலுள்ள சேரன் உருத்திரமூர்த்தி, பிரித்தானியாவில் பி.இளங்கோ, கனடாவிலுள்ள வீ.இலங்கப்பிள்ளை,

அர்ஜுனன் எதிரிவீரசிங்கம், வினிபரா என்ற ரஞ்சித் பெர்னாண்டோ, சுவீடனிலுள்ள ஜெகன் மோகன், நோர்வேயிலுள்ள ஜெயசந்திரன் மற்றும் நெதியவன், மலேசியாவில் தென்லிங்கம், லண்டனிலுள்ள ஜேம்ஸ் கருணாதரன், அவுஸ்திரேலியாவிலுள்ள சதியன் குமாரன்,

கனடாவிலுள்ள லூகஸ் பாலசிங்கம் (தமிழீழ காவல்துறை பொறுப்பதிகாரியின் சகோதரன்),பரிசிலுள்ள வாணிவண்ணன், வேரங்கம், நடராஜா மதிதரன், அவுஸ்திரேலியாவின் பாலந்திரா மதினன், கனடாவிலுள்ள டேவிற் பூபாலபிள்ளை, அமெரிக்காவின் ராஜ ராஜ ரெட்ணம், அவுஸ்திரேலியாவிலுள்ள ராகவன் ஆகியோரின் பெயர்களையே கே.பி. வெளியிட்டிருப்பதாகத் திவயின கூறியுள்ளது.

புலிகளின் இந்த சர்வதேச வலையமைப்பில் திறைசேரியின் முன்னாள் அதிகாரி ஒருவரும் முன்னாள் சட்ட மாஅதிபரும் உள்ளடங்குவதாகப் பாதுகாப்பு உயர் மட்டத் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த 25 வருடங்களாக விடுதலைப்புலிகளுக்கு நிதி சேகரிப்பது, இணையத் தளங்களை நடத்துவது, பல நாடுகளிலுள்ள அரசியல்வாதிகளுடன் இணைந்து இலங்கைக்கு எதிராகச் செயற்படுவது போன்ற நடவடிக்கைகள் இவர்களுக்கு வழங்கப்பட்டிருந்தன.

கே.பியிடமிருந்து இந்தத் தகவல்கள் வெளியாகியதையடுத்துச் சில விடுதலைப் புலிகளின் செயற்பாட்டாளர்கள் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவதைத் தவிர்த்து வருகின்றனர் எனத் திவயின தெரிவித்துள்ளது.(ச-5)

## யாழில் கடந்த மூன்று மாத காலத்தில்...

வவுனியா, கொடிகாமம் நலன்புரி முகாம்களில் தங்க வைக்கப்பட்டிருந்த யாழ்.மாவட்டத்தைச் சொந்த இடமாகக் கொண்ட ஆயிரத்து 60 குடும்பங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்து 349 பேர் நேற்று உறவினர்களுடன் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

இத் தகவலை யாழ்.அரச அதிபர் க. கணேஷ் தெரிவித்தார்.இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

கொடிகாமம் அ.த.க. பாடசாலை நலன்புரி முகாமில் தங்க வைக்கப்பட்டிருந்த யாழ். மாவட்டத்தைச் சொந்த இடமாகக் கொண்ட 127 குடும்பங்களைச் சேர்ந்த 404 பேர் நேற்று உறவினர்களுடன் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

இதன் மூலம் யாழ்.மாவட்ட நலன்புரி முகாம்களில் ஆரம்பத்தில் தங்க வைக்கப்பட்டிருந்த 3 ஆயிரத்து 810 குடும்பங்களைச் சேர்ந்த 11 ஆயிரத்து 287 பேரில் நேற்று வரை 2 ஆயிரத்து 497 குடும்பங்களைச் சேர்ந்த 7 ஆயிரத்து 52 பேர் சொந்த இடங்களில் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

அத்துடன் யாழ்.நலன்புரி முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள ஏனைய குடும்பங்கள் த்மது உறவினர்கள் தொடர்பான விபரங்களைச் சமர்ப்பித்தால் அவர்களுடன் சேர்ந்து வாழ அனுமதிக்கப்படுவர்.

இதனிடையே வவுனியா நலன்புரி முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளவர்களில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 933 குடும்பங்களை சேர்ந்த 2 ஆயிரத்து 945 பேர் நேற்று யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வரப்பட்டனர்.

இம் மக்களில் சங்கானைப் பிரதேச செயலக பிரிவைச் சொந்த இடமாகக் கொண்ட 471 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 493 பேர் நேற்று மாலை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி தொழில் நுட்ப நிறுவனத்திற்கு அழைத்து வரப்பட்டனர்.

இக் குடும்பங்கள் பிரதேச செயலக அலுவலர்களினாலும் படையினராலும் குடும்பப் பதிவுகள் செய்யப்பட்டு உறவினர்களுடன் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

அத்துடன் வவுனியா நலன்புரி முகாம்களிலிருந்து தெல்லிப்பழை பிரதேச செயலக பிரிவைச் சொந்த இடமாகக் கொண்ட 462 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 452 பேர் நேற்றிரவு அழைத்து வரப்பட்டனர்.

இவ்வாறு அழைத்து வரப்பட்ட மக்களும் தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயத்தில் வைத்துப் பிரதேச செயலக அலுவலர்களினாலும் படையினராலும் குடும்பப் பதிவுகள் மேற் கொள்ளப்பட்டு உறவினர்களுடன் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

### யாழில் மூன்று மாதத்தில்
### 49 ஆயிரத்து 813 பேர் மீள்குடியமர்வு

யாழ்.மாவட்டத்தில் கடந்த ஓகஸ்ட் 5 ஆம் திகதியிலிருந்து நேற்றுவரை 16 ஆயிரத்து 185 குடும்பங்களைச் சேர்ந்த 49 ஆயிரத்து 813 பேர் மீள்குடியமர்த்தப்பட்டுள்ளனர். இதில் தென்மராட்சி, தீவகப் பிரதேச செயலக பிரிவுகளிலிருந்து உள்ளக இடம்பெயர்வில் நலன்புரி முகாம்களுக்கு வெளியிலிருந்த 433 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 550 பேரும் மீள்குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

அத்துடன் யாழ்ப்பாண நலன்புரி முகாம்களிலிருந்து 2 ஆயிரத்து 497 குடும்பங்களைச் சேர்ந்த 7 ஆயிரத்து 52 பேர் யாழ். மாவட்டத்தில் சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் ஒரு தொகுதியினர் உறவினர்களுடன் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இதற்கு மேலாக வவுனியா, மன்னார் நலன்புரி முகாம்களிலிருந்து 13 ஆயிரத்து 255 குடும்பங்களைச் சேர்ந்த 41 ஆயிரத்து 211 பேர் நேற்று வரை யாழ்.மாவட்டத்திற்கு அழைத்து வரப்பட்டு மீள்குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

எனவே யாழ்.மாவட்டத்தில் கடந்த ஓகஸ்ட் 5 ஆம் திகதியிலிருந்து நேற்று வரை 16 ஆயிரத்து 185 குடும்பங்களைச் சேர்ந்த 49 ஆயிரத்து 813 பேர் சொந்த இடங்களில் மீள் குடிமர்த்துப்பட்டும் ஒரு தொகுதியினர் உறவினர்கள், நண்பர்களுடனும் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என யாழ்.அரச அதிபர் க.கணேஷ் குறிப்பிட்டார்.

இதேவேளை நேற்று உறவினர்களுடன் செல்ல அனுமதிக்கப்பட்ட ஆயிரத்து 60 குடும்பங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்து 379 பேரையும் நேரில் சென்று நிலைமைகளைக் கேட்டறிந்த சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா 5 ஆயிரம் ரூபாய் நிதியுதவியையும் கையளித்தார்.

அத்துடன் மக்களை விரைவாக உறவினர்களுடன் செல்வதற்குரிய ஏற்பாடுகளை யாழ்.அரச அதிபர் க.கணேஷ், யாழ்.செயலகத் திட்டப் பணிப்பாளர் ம.பிரதீபன் மற்றும் பிரதேச செயலர்கள் நேரில் சென்று முன்னெடுத்தனர். (ச-5)

## இலங்கை

இலங்கைக் கடற்படை
வேலை நிறுத்தத்தில் ஈடுபட்
மண்டபம் மீனவர்கள் வழக்
பிடிக்கக் கடலுக்குச் சென்றன
அப்போது இலங்கைக் க
மண்டபம் மீனவர்களைப் ப
வரை விரட்டி வந்ததாகவும் இ
படையில் சீனர்கள் கோடரி
தாக மீனவர்கள் கூறினர்.
இதேபோல் கடந்த 28 ஆ
மேஸ்வரத்திலிருந்து மீனவர்க
படகு மீன்பிடிக்கச் சென்றது
கடற்படை இப் படகைச் சேதப்ப
மீனவர்களையும் தாக்கினர்.
தாக்கப்பட்ட மீனவர்கள் இ
படையில் சீனர்களும் இருந்த
யுள்ளனர். இதன் மீது விசா
கொள்ளுமாறு மண்டபம் இந்
ரக் காவற்படைக்கு மத்திய பாது
சகம் உத்தரவிட்டுள்ளது.
அதன்படி நேற்றுக் கடலே
படையினர் இராமேஸ்வரம் செ
கைக் கடற்படையினரால் தாக்க
மடைந்த மீனவர்களிடம் விசாரணை
கடலோரக் காவற்படை நிலை
கள் கூறுகையில், மீனவர்கள் மீது
கடற்படையினர் நடத்திய தாக்கு
கள் காயம் பட்டதை ஆதாரமாக
எடுத்துள்ளோம்.
இந்திய எல்லைக்குள் வந்து
கடற்படை தாக்கியதாகவும் அதில்
இருந்ததாகவும் மீனவர்கள் கூ
இந்தத் தகவல்களையும் மத்தி
அனுப்பவுள்ளோம் என்றனர்.

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 31.10.2009 இல் அச்சிட்டு வெளி